# அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

தி.மு.க. வார வெளியீடு.

9-6-61 ] :-: ] விலை 16 காசு


## நாடு கேட்கிறது!




## அதிசயம்! ஆனால் உண்மை!

### அய்யா—சம்பத் சந்திப்பு!!

சென்னை: திராவிடக்கழகத் தலைவரும் தமிழ்த்தேசியக் கட்சி தலைவரும்—இன்று சந்தித்து சுமார் 2 மணி நேரம் பேசினார்கள். (நமது நிருபர்)

உள்ளம் எப்படிக் களிக்குமோ அதே களிப்பைப் பெறுகிறோம்! ஒன்றரை லட்சம் ரூபாய்களைத் தாண்டி விட்டது நம்முடைய தேர்தல் நிதி—உற்சாகத்தோடு அறிவிக்கிறார் பொருளாளர்—ஒன்றரை லட்சம் ரூபாய்! ஒன்றல்ல, இரண்டல்ல—ஒன்றரை லட்சம் ரூபாய்!!

"என்னது? ஒன்றரை லட்சமா! பூ! இது ஒரு பெரிதா. இதற்கா, களிக்கிறேன், இளிக்கிறேன், பூரிக்கிறேன், பொரிக்கிறேன் என்கிறான். ஒரு புன்சிரிப்பு! ஒன்றரையென்ன, ஐந்தரை லட்சம் காலில் விழும் காங்கிரசுக்கு... அது கட்சி! இதைப்பார்—ஏதோ, கிறது காங்கிரசு, அந்தக் காங்கிரசுக்குள் போய் கல கலவெனும் காசாயுதத்தைக் காட்டினால் நிச்சயம் இருக்கிறது எம். எல். ஏ., எம். பி. இடம் என்று இப்படி 'இருக்கிறது, இருக்கிறது' எனச் சொல்லும் தரத்தினரல்லநாம்! இல்லாதவர்கள்-பொல்லாத எண்ணங்கள் இல்லாதவர்கள் கபடம் இல்லாதவர்கள்-மனதிலே மாசு மட்டுமின்றி, கையிலே காசும் இல்லாதவர்கள்!! இப்படிப்பட்ட நமக்கு, பொருளாளர் தரும், 'ஒன்றரை லட்ச ரூபாய்' சேர்ந்தது என்கிற செய்தி, உண்மையில் தேனினும் இனியதாய் உள்ளது-தித்திக்கும் பலா, கன்னல் சாறு, கனிவகை இவையாவும் கலந்த சுவையைத்தருகிறதுதோழர்காள்


"வந்தனம் ஆசிரியரே! தந்தனம் இதோ ஒரு புதுச் செய்தி. பரபரப்பான செய்தி பார்த்தோர் மிரண்டுவிடக் கூடிய செய்தி. அகில உலகமே, 'அப்படியா' என்று மூக்கின்மேல் விரலை வைத்து, மூச்சைவிடவும் மறந்து விடக்கூடியச் செய்தி. யாரும் எதிர்பார்க்காத செய்தி. இறந்த காலத்தில் நிகழாத செய்தி. இதுவரையில் ஏற்படாத செய்தி... இந்தவார ஏட்டில் நீர் போட வேண்டும்'', என்று மேலே கண்ட செய்தியை நீட்டினான், வீரன், என் தோழன் தலைப்புகளும் அவனே போட்டிருந்தான். பார்த்ததும் எனக்குச் சிரிப்பு வந்தது!!

'யோ! ஆசிரியரே, என்ன திமிரய்டா உனக்கு. இதைப் பாத்து சிரிக்கிறயே. சிரிக்கக்கூடிய விஷயமா, இது? சிந்திக்க வேண்டிய


தொடர்ச்சி 2-ம் பக்கம்


## குடும்பத்தோரே! குதூகலிப்போம்!!

பேரானந்தம் ஏற்படுகிறது—பெரியதொரு வெற்றியெனக் கருதுகிறோம்—எவர் தூற்றினாலென்ன எனும் அலட்சியம் இன்னும் அதிகமாகிறது—அயர்வோ, கவலையோ, கொண்டிடாத அண்ணன் தம்பிகளன்றோ என்தோழர் என்று எண்ண எண்ண இன்பம் இருதயமெல்லாம் நிறைகிறது! காட்டு நிலத்தைக் கழனியாக்கி அந்தக் கழனிக்கு வாய்க்காலமைத்து, விதைபோட்டு, நாத்து எடுத்து நட்டு. பயிர் விளையும் போது இடையிடையே உண்டான 'களை'களைக்கண்டு அஞ்சி அக்களைகள் இருந்த இடம் தெரியாதபடி, பயிரும் வளர்ந்து, கைநீட்டி அறுத்தெடுக்கும் வகையில், தங்கக் கதிர் தள தள வென்று ஆடினால், உழவன் ஒரு ஒன்றரை லட்சம் வந்ததற்குப் படுத்துகிற பாட்டினை,"



தூற்றினர்! ஏசினர் எனினும் ஒன்றரை லட்சம்...

என்று ஏளனம் செய்யக்கூடியவர்கள், இருக்கிறார்கள். அவர்கள் சகல சம்பத்துக்களையும் பெறும்வாய்ப்புள்ள வாடாத் திருமேனிகள்! ஓடாய் உழைப்பதை ஒருநாளும் அறியாத உல்லாசிகள்! "ஏடா காத்தான்! எங்கேடா யிருக்கிறது அரிசி காய்க்கிற மாம்,'' என்று கேட்கின்ற அளவுக்கு, வெயிலையே கண்டிராத விவேகிகள்! எது போனாலென்ன வந்தாலென்ன, இருக்கின்றது என் அப்பன் சொத்து, அதைக் கொண்டு சமுதாயத்தில் நான் பெற்ற கவுரவம் எனக்கிருக்கிறது. அந்தக் கவுரவத்தைக் காட்டினால் என்னை நோக்கிக்கண் சாடை காட்டி யிழுக்கவே இருக் நாமெல்லாம் சேர்த்து விட்டோம்


(1-ம் பக்கம் பார்க்க)

## அதிசயம்! ஆனால்..-

[1-ம் பக்கத் தொடர்ச்சி

செய்தி! ஆழ்ந்து யோசிக்கவேண்டிய பிரச்னை! அய்யாவும், சம்பத்தும் சந்தித்துவிட்டார்கள். என்றான் கொஞ்சம் ஆத்திரத்தோடு. கவிஞர் கண்ணதாசனைப்போல, கடுகை மலையாக எண்ணுவான் சில சமயங்களில், மலையைக் கடுகாகவும் மதிப்பிடுவான்—இரண்டையும் எவரும் பொருட்படுத்தவில்லையென்றால், தனியாக உட்கார்ந்துகொண்டு, "இந்த உலகமே மோசம்! ஏ, உலகமே! ஏ மனிதா! ஏ, வானமே! மேகமே!", என்று அழுவான். இதனால், எனக்கு, வீரன்மீது எப்போதுமே அன்பும் அனுதாபமும் அதிகம் உண்டு.

"அப்பா வீரா! ஏன் 'தினத்தந்தி'த்தனம் செய்கிறாய்? உலகத்தில் அப்பாவும் பிள்ளையும் சந்திப்பதும் பேசுவதும் ஒரு அதிசயமா?" என்றேன்

"அப்பாவும் பிள்ளையுமா! ஆசிரியரே, நீர், உமது மூளையை அடகு வைத்துவிட்டீர். பெரியார், சம்பத்துக்குச் சித்தப்பாவாக யிருக்கலாம். ஆனால், சம்பத்து யார் தெரியுமா? தமிழ் தேசீய கட்சித் தலைவர்! ஒரு தலைவர், இன்னொரு தலைவரைச் சந்தித்தது சாதாரண விஷயமாகுமா?" என்றான்.

"பைத்தியக்காரா! திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்த போதே சம்பத்தும் அய்யாவும சந்திப்பதும் பேசுவதும் கிடையாதென்று நினைத்தாய்? இருவேறு கழகங்களில் தந்தையும் பிள்ளையும் இருந்த காரணத்தாலேயே, ஒருவரைப் பற்றி இன்னொருவர் விசாரிக்காமலும், பார்த்துப் பேசாமலுமா இருந்தார்கள் என்று நினைக்கிறாய்?

டில்லிக்குப் போனபோதுகூட சம்பத் வீட்டில்தான் பெரியார் தங்கினார். தான் வைத்திருக்கும் சொத்துப் பாதுகாப்புக் குழுவில் கூட, சம்பத்தைப் பெரியார் போட்டிருப்பதாக, அவர்கள் உறவினர் ஒருவர், என்னிடம் சொன்னார். ஆதலால், தந்தையும் பிள்ளையும் சந்தித்தது என்னடா அதிசயம்? இதனால் நமது நாட்டுக்கான நன்மை யென்னடா உள்ளது? தேவை என்னடா பூர்த்தியாகிவிடப்போகிறது. போடா, போய், வேறுவேலையைப் பார்!" என்றேன்.

"அப்படியென்றால்! இரண்டு பேரும் சந்தித்தது, இரண்டு அரசியல் கட்சியின் இருபெருந் தலைவர்கள் சந்தித்தது போலில்லை, என்கிறீரா?", என்றான், அவன் கோபத்தோடு.

"உண்மையைச் சொன்னால், இரண்டுபேரும் சந்தித்தபோது என்னடா பேசியிருப்பார்கள்... சம்பத்தைப்பார்த்து அய்யா, "என்னடா சம்பத்! எங்கே வந்தே? புதிதாக வாங்கிய மாடி வீட்டுக்குப் பந்தல் போடணும்னுயே, போட்டாயா! வாடகை சரியாக வசூலாகவில்லையென்று செல்வன் வருத்தப்படுகிறானமே, நிசமா! விசாரித்தாயா? ராஜு, விடுதலை 'கோட்டா' விஷயமாக ஏதாவது சொன்னானா!" என்று இப்படி யேதாவதுதான் கேட்டிருப்பாரே ஒழிய," வாங்க! வாங்க! புதுக்கட்சி ஆரம்பிச்சிருக்கிற நீங்க, ஏதோ என்னைப் பார்க்கணும்னு எழுதினதா, மணி சொல்லிச்சு. வரட்டுமே, அவுங்க வர்றது ரொம்பமுக்கியம்னு நானும் சொன்னேன். எப்படியிருக்கீங்க! என்ன சேதீங்க? என்று வரவேற்றிருப்பார்."

"அப்போ! இச் சந்திப்பு ஒரு குடும்ப விஷயம். இதற்கும் தமிழ் நாட்டு அரசியலுக்கும் ஒரு முக்கியமும் இல்லை வீணாக மற்றவர்கள் பெரிது பண்ணுகிறார்கள். இதான், உன் எண்ணமா? ஏனாசிரியரே! இரண்டுபேரும், சொந்த விஷயங்களைத் தவிர, வேறெதுவும் பேசியிருக்கமாட்டார்கள் என்கிறீரா?", என்றான், வீரன்-நெற்றி சுருங்கியது. என் கூற்றை அவன் ஒப்பும் அறிகுறி அது.

" வாடகை வாங்குவதிலிருந்து அரசியல் வரை, எல்லாம் சொந்த விஷயங்கள் தாண்டா இருவருக்கும்! என்ன இருந்தாலும் அப்பாவின் மனம் போல் நாம் நடக்க ஆரம்பித்து விட்டோம் என்கிற எண்ணம் சம்பத்துக்கும், பரவாயில்லை—பயல் என்கிற நினைப்பு அய்யாவுக்கும் ஏற்படாமலா இருக்கும்? தன்னைப் போலத் தன் பிள்ளையும் ஆகிவிட்டான் என்று எந்தத் தந்தை ஆனந்தப் படமாட்டார்! அந்த ஆனந்தத்தைத் தன் அப்பாரின் முகத்தில் காணவேண்டுமென்று எங்

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)

## கோவை மாவட்ட
## தி. மா. மு. க. முதல் மாநாடு

கோவையில் 2—7—61 ஞாயிறு காலை 9—மணி முதல் இரவு 9—மணிவரை, ஸ்டேன்ஸ் மில் கல்யாண மண்டபத்தில் நடைபெறும்.

தலைவர்: தோழர் அப்பர்சுந்தரம் எம். ஏ (சட்டக்கல்லூரி)

திறப்பாளர்: தேபழர் இளங்கோவன் பி. ஏ (பச்சையப்பன்—கல்லூரி)

வ. கு. தலைவர்: தோழர் கே. ஏ. கிருட்டிணசாமி பி. ஏ, ஆனர்சு (சட்டக்கல்லூரி)

மாணவர் பொதுச் செயலாளர் தோழர் எஸ். டி. சோமசுந்தரம் பி. இ. அவர்களும், மாணவர் கழகப் பேச்சாளர்கள் அனைவரும் பங்கேற்பர்.

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

ரூபாய் ஒன்றரை லட்சம்—கழகத் தோழர்களாகிய நாமெல்லாம் ஓரணா, இரண்டணா, ஒரு ரூபாய், ஐந்து ரூபாய் என்று திரட்டியனுப்பியதன் மூலம் தேர்தல் நிதிக்கென ஒன்றரை லட்சம் சேர்த்து விட்டோம். இந்த ஒன்றரை லட்சத்திலே, எத்தனை பேருடைய ஆனந்தக் கண்ணீர் இருக்கிறது—வியர்வை இருக்கிறது—ஒருவேளை சாப்பாட்டை இழந்தத் தியாகம் இருக்கிறது—என்று எண்ணிடும்போது, உண்மையில் நமக்கு பெருமூச்சு ஏற்படாமலிருக்காது.

"பெரிய வேலையா! ஊருக்கு ஊர், சிறப்புக் கூட்டங்கள் போட்டு வசூலிப்பது. ஒரு பெரிதா!", என்று சொல்வோர் தெரியாமலில்லை. அப்படிச் சொல்வோர் எண்ணிப் பார்த்திடல் வேண்டும்—உலகிலுள்ள எந்த அரசியல் கட்சியும், இப்படிப் பேச்சுக்குக் கட்டணம் வைத்து வசூல் செய்தது இல்லை-திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் அப்பெருமையை பெறுகிறது, இந்த நூற்றாண்டில். 'ஓகோ, என்ன பெருமை! பேச்சைக் கேட்கவா, மக்கள் வந்தார்கள். எம். ஜி. ஆரைப் பார்க்க, எஸ். எஸ். ஆரைப் பார்க்க, கே. ஆர், ஆரைப் பார்க்க, வளையாபதியைப் பார்க்க, டி. வி. என்னைப் பார்க்க," என்று பொருமும் திருவாளர்கள் தெரிகிறார்கள் கண்களுக்கு. அப்படிப்பட்டவர்களைப் பெற்றிருப்பது திராவிட முன்னேற்றக் கழகமன்றோ?— என்று நாம் மனம் பூரிப்போம். கழகத்துக்குத் தேர்தல்நிதி திரட்டிடுவதில், கலைஞர்கள் தந்த பங்கு பெரிதே! அந்தக் கலைஞர்கள் ஊர் ஊருக்கு பேசப் போனது மட்டுமல்ல-பிச்சையும் எடுத்திருக்கிறார்கள்!! பிச்சையெடுத்தார்களா — அவர்களா? எனக் கேட்கக்கூடும். ஆம் தோழர்காள்! நமது பொருளாளர் என் சகோதரர் கருணாநிதி அவர்களின் திறன்தான் உங்கட்குத் தெரியுமே. அவர்தானே திரையுலக நடிகர்களை தெரு வீதிக்கு இழுத்து வந்தவர். கழக நிதியினைத் திரட்டும் வகையினையும் திறம்பட அறிந்தவர் அவர் என்பதுதான் அறிவீர்களே! அவர், எஸ், எஸ். ஆரை அழைத்துக் கொண்டு சாத்தூருக்குப் போயிருந்தாராம். கழக நிதிக்கென்று சாத்தூரில் ஒரு சிறப்புக் கூட்டம். ரூபாய் ஆயிரம் தருவதாகச் சொன்னார்களாம், கழகத் தோழர்கள். ஆனால், கூட்ட முடிவில், சேர்ந்ததோ ரூபாய் எண்ணூறுதான்! விடவில்லை நம் பொருளாளர். வழக்கம் போல "ஓ என் குடும்பத்தாரே! தாய்மாரே! உங்களிடம் நானும் ராஜேந்திரனும் கையேந்திப் பிச்சையெடுக்க வருகிறோம். எண்ணூறு ரூபாயை ஆயிரமாக்க வேண்டியது உங்கள் பொறுப்பு," என்று பேசிவிட்டு, மேடையிலிருந்து இறங்கி, "கேட்"டில் போய்இரண்டுபேரும் நின்றுகொண்டு, மேல் துண்டைக் கையிலேந்தியபடி நமது பொருளாளர் ஒருபக்கமும்எஸ்.எஸ்.ஆர் இன்னொரு பக்கமும் நின்றவண்ணம் பிச்சை யெடுத்திருக்கிறார்கள். பொதுமக்களும் மீதி இரு நூறு ரூபாய்க்குமேல் அளித்து ரூபாய் ஆயிரத்தை நிறைவு செய்திருக்கிறார்கள். கலைஞர்களும், நமது தலைவர்களும், யாருக்காகப் பணிபுரிகிறோமோ அந்த மக்களிடம் கையேந்தி யாசிப்பது குறைவானதென்று எண்ணுவர்? சீமான்களிடம் கைநீட்டி "தனிக்கட்சி வைத்து, தாக்கு தாக்கு என்றுதி. மு. கவைத் தாக்கிறேன். கொடு, செக்!" என்று பல்லிளிப்பதுதான், சமூகக்கேடு வேண்டாத செயல் சுயநல ஆசை. சமூகத்தை மாற்றியமைக்கும் திருப்பணிக்கு, நாம் எது செய்தாலென்ன, இப்படிச் சிறப்புக் கூட்டங்கள் நடத்தி மட்டும் நாம் இந்த ஒன்றரை லட்சத்தை அடையவில்லை. இன்னும் பல வழிகளில், சேர்க்கப் பட்டது இத்தொகை. அதோ! அதோ! சென்னை மாநகரத்தின் பல பகுதிகளுக்கும் சென்றால், உண்டியல் வைத்துத் தினம் ஓரணா இரண்டணா என்று சேர்க்கிறார்கள் கழகத்தவர்கள்!- வீடு வீடாகச் சென்று வசூலித்து அனுப்புகிறார்கள் கழகத் தோழர்கள். கூட்டங்களுக்குச் செல்லும் நமது பேச்சாளர்கள், ஒவ்வொரு கூட்டத்திலும் உண்டியல் எடுத்து, நிதி சேர்க்கிறார்கள். புலவர் அறிவுடை நம்பியைத் தெரியுமா உங்களுக்கு? அவர் ஒரு முறையைப் பின்பற்றுகிறாராம் தான் பேசப் போகிற இடங்களில். தலைமை நிலையத்தில் சொன்னார்கள் வாரா வாரம் நூறு ஐம்பது என்று அவரிடமிருந்து தேர்தல் நிதி வருவதாக. ஒவ்வொரு பொதுக்கூட்டத்திலும் ஒரு அரைமணி நேரம் பேசுகிறாராம்-உடனே நிறுத்திவிட்டு, "பெரியோர்களே! பேச்சை நான் பிறகு தொடருகிறேன். இடையில் இப்போது, நான், நீங்கள் உட்கார்ந்திருக்கும் இடம் நோக்கி, ஒவ்வொருவரிடமும் வருவேன். உங்களுக்காகப் பாடுபடும் கழகத்துக்கு, உங்களாலான காசை, என்னிடம் போடுங்கள்," என்று மேல் துண்டை எடுத்துக் கொண்டு, மேடையிலிருந்து இறங்கி, நேராக மக்களிடம் போய் வசூல் செய்கிறாராம். வசூல் முடிந்ததும் பிறகு மேடைக்கு வந்து, விட்ட இடத்திலிருந்து பேச்சைத் தொடர்ந்து, வசூலித்த பணத்தைத் தோழர்கள் எண்ணி முடிக்கும்வரையில் பேசிவிட்டு, பேச்சை முடிக்குமுன்பு வசூலான தொகையை அறிவிக்கிறாராம்! இதைக் கேட்டபோது, உண்மையிலேயே, மகிழ்ந்தேன்-தோழர் நம்பியின் இந்த முறையினை, எல்லோரும் பின்பற்றினால் எவ்வளவு அழகாயிருக்கும்என்று எண்ணினேன்!! இப்படியெல்லாம் நாமெல்லாம் பாடுபட்டுப் பெற்றப் பலன்தான், இந்த ஒன்றரை லட்சமும். பாடுபட்டது நாமென்றாலும், நாம் மறந்துவிட

(12-ம் பக்கம் காண்க)

தோழரீர்!

ஈச்மென் பற்றிய இந்தக் கொடுமை ஓவியத்தை இந்த கிழமையே, முடிக்க இருந்தேன்.

பலதோழர்கள் அவசரப்பட்டு முடிக்கவேண்டாம். வரும் சந்ததிகள் உணரவேண்டிய இந்தப் பரிதாபக் காதை, விளக்கமாகவே யிருக்கட்டும் என எழுதியுள்ளனர்.

எனினும் இன்னும் ஓரிரு இதழ்களில், முடிக்க முயல்கிறேன்.

ஆசிரியர்.


# 60,00,000 பேர்களைக் கொன்ற காதகன்!

[சென்ற இதழ் தொடர்ச்சி]

அண்ணனைத் தம்பிப் பார்த்தான் பிணமாக! "போனயோ அண்ணா?", என்று புலம்பினலோ, அடுத்தகணம், ஜெர்மானியரின் குண்டு, அவனையும பிணக் குழியில் வீழ்த்தும். இதைப்போலத் தம்பியரைப் பிணமாகக் கண்ட அண்ணன்கள்! தங்களது தங்கச் சிலையாம் குழந்தைகளைக் குற்றுயிரோடு கண்ட தாய்மார்கள்! கணவனது பிரேதத்தைக் கண்டலறிய பெண்மணிகள்! "கண்ணே! மணியே! பொன்னே!" என்று குலவிய தத்தமது மனைவிகளின், பிளந்த வாயையும், பேச்சில்லாத உடல்களையும் கண்டு துடித்த கணவன்மார்கள்! அய்யகோ, இவ்வண்ணம் அவதிக்கு ஆளானேர் அறுபது இலட்சமெனில், அங்கெல்லாம் உண்டாகியிருக்கும் வேதனையின் விளைவை எழுத இயலுமோ? சாதாரணமாக ஒருவர் கொலை யுண்டுவிட்டால்—காரில் அடிபட்டு விழுந்துவிட்டால்—நமது கண்ணிகர் குழந்தையின் காலிலிருந்து ஒரு சொட்டு இரத்தம் வந்தால்--கட்டிய மனைவிக்குக் கடும் காய்ச்செலன்ருல்—என்னென்ன பாடுபடுகிறது, மனம்!

அங்கே இத்தனைக் கொடுமைகளையும் ஒரு சேரக்கண்ட யூதர்களின் மனம், என்ன பாடுபட்டிருக்கும்!! ஒன்ரு—இரண்டா—அறுபதுலட்சம் உயிர்கள்—உலகத்திலே வாழப் பிறந்த உயிர்கள்—யூதர்களாகப் பிறந்தது தவிர ஒரு குற்றமும் செய் றியாத உயிர்கள்—சந்தையிலே அடுக்கப்பட்ட மீன்களைப்போல, பறந்து வீழும் ஈசல் பூச்சிகளைப்போல, கொசுக் கூட்டங்களைப்போல, கூட்டித் தள்ளப்பட்டு, புதைக்கப் பட்டன!!

இவ்வளவு கோரத்திற்கும் காரணமான ஈச்மென், குழந்தையாயிருந்தபோது, எடுத்தப் படம் தான் இதோ இருப்பது.



பால்வடியும் இந்த வதனம் பயங்கரமாகக் காரணம் யாது? சூதுவாதற்ற இந்தச் சுந்தர முகம் சொறிக் குரங்கின் சுபாவம் பெற்றது ஏன்? கலங்கமிலாத உள்ளம் படைத்த இந்தக் குழந்தை உலகமே மிரளும் கொலைகாரனக் காரணம் என்ன? வயதான பிறகு "நல்லது" என நம்பிய ஒரு கொள்கைதான் காரணம்! எந்தக் கொள்கை ஹிட்லரை உருவாக்கியதோ, எந்தக் கொள்கைஜெர்மானியர் மட்டுமே வாழவேண்டும் என்று வலியுறுத்தியதோ, எந்தக் கொள்கை யூதர்களை ஒழிக்க வேண்டுமென்று, தூண்டியதோ, அந்தக் கொள்கையைத்தான் தேசிய உணர்ச்சி என்று பெயர் கொடுத்தனர், ஜெர்மானிய மக்கள். இந்தத் தேசீய உணர்ச்சிக்கு வித்திட்டவன் யார் அது விளைவித்த நிகழ்ச்சிகள் என்ன என்பதைப் பார்ப்பதற்கு முன், அறுபது லட்சம் பேருடைய சாவுக்குக் காரணமான ஈச்மென் அகப்படுவதற்கு ஈராண்டுகளுக்கு முன், தனனுடைய நடவடிக்கைகளைப் பற்றி எழுதிய "சுயசரிதத்திலிருந்து" சில முக்கியமான பகுதிகளை, உங்களுக்குத் தருகிறேன். இந்தச் சோக வரலாற்றின் முக்கியமான பகுதி இது. விளக்கமும் தெளிவும் தரும் படியுங்கள்:

என் பெயர்: அடால்ப் ஒட்டோ ஈச்மென்,


இனம்: ஜெர்மன்

தொழில்: லெப்டினண்ட் கர்னல் (ரிடையர்டு)

என்னுடைய முக்கிய வேலை இவன் யூதன, இல்லையா என்று தீர்மானிப்பதாகும். யூதன் என்று முடிவாகிவிட்டால், உடனே ஜெர்மானிய குடியுரிமையைப் பறிமுதல் செய்வேன். அதன் மூலம், அவன் ஜெர்மனியில் சம்பாதித்துச் சேர்த்தச் சொத்துக்களைப் பறிமுதல் செய்வேன். முதலில் இதுவே என் வேலையாக யிருந்தாலும் யூதர்களை ஒழிக்கவேண்டும் என்ற முடிவுக்கு நாங்கள் வந்ததும், யூதர்களை ஓரிடத்தில் சேகரிக்கவேண்டிய பொறுப்பும் எனக்கு வந்தது. ஜெர்மனியிலிருந்த யூதர்களை மட்டுமல்ல! நாங்கள் வெற்றி பெற்ற ஐரோப்பிய நாடுகளில், எங்கெங்கு யூதர்களிருந்தார்களோ, அவர்களைப்பற்றி டத்துக்குக் கொண்டு வரவேண்டிய வேலையை, என் இலாகா செய்தது. ஐரோப்பா முழுவதிலும் என்ருல், என் வேலை எவ்வளவு கடினம் என்பதை எண்ணிப் பாருங்கள். போர் நடைபெற்ற பொழுது, ஒருநாள்கூட நான் நன்ருகத் தூங்கியதில்லை...

1935-ல் பெர்லினுக்கு நான் மாற்றப்பட்டது முதல், என் வாழ்க்கை ஆரம்பமாகிறது. யூதர்களைப் பற்றிய பிரச்னை, என் வசம் ஒப்படைக்கப்பட்டது. யூதர்கள், சதியாளர்கள், ஹிட்லருக்கு எதிராக இரகசிய வேலைகளில் ஈடுபடுகிறவர்கள், முதலியோரின் பெயர்களையும் விபரங்களையும் சேகரிப்பதே என் வேலையாகயிருந்தது. இதை நான் ரசிக்கவில்லை. மேசையிலே உட்கார்ந்து கொண்டு செய்கின்ற இது ஒரு வேலையா என்ன!! இந்தச் சமயத்தில்தான், யூதர்களின் பிரச்னையைத் தீர்ப்பது பற்றிய யோசனைகளில் ஈடுபடுமாறு என் மேலதிகாரிகள் சொல்லினர். என்னுடைய மேலதிகாரி ஜெனரல் ஹெய்டிரிச் என்பவர். இவரளித்த உற்சாகத்தினல், நான் யூதர்களின், ஹீப்ரு மொழியையும் ஓரளவுக்குப் படித்தேன்.

1935-ல் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள், ஜெர்மனியின் வாழ்க்கையிலிருந்து யூதர்களை அறவே ஒழிக்கும் வழிவகைகளைச் சொல்லின. இந்தச் சட்டங்களைக் கையில் வைத்துக்கொண்டு, யார் யூதன், எவன் யூதன் என்று என்னுடைய இலாகா புள்ளிவிவரங்களைச் சேகரிக்கலாயிற்று. இது மிகவும் சிரமம் நிறைந்த வேலையென்பதோடு — சில வேளைகளில் எதிர்பாராத ஆச்சரியங்களையும்கூட அளித்தது. ஹிட்லருக்கு ஒருபோது ஆசைக்கிழத்தியாகவும், பிறகு சமையல்காரியாகவும் விளங்கியவள் ஒரு யூத மாது யெல்லாம் கணக்கெடுத்து, ஓரி





ஈச்மென்னும் அவன் மனைவியும்

என்பது தெரிந்தது! ஜெனரல் ஹெய்டிரிச்சுக்கு அடுத்த நிலையிலிருந்த உதவி ஜெனரல் முல்லர் உடனே அந்த பைலை 'பெரிய இரகசியம்' என்று பெயரிட்டு, பத்திரப்படுத்திவிடச் சொன்னார்.

இரண்டரையாண்டு காலம் படாத பாடுபட்டு நான் யூதர்களின் ஹீப்ரு மொழியைக் கற்றுக் கொண்டு 1937-ல் பாலஸ்தீனம் சென்றேன். (பாலஸ்தீனம்தான் இப்போது இஸ்ரேல்!) ஏனெனில், ஐரோப்பாவிலிருக்கின்ற யூதர்களை, அவர்களுடைய பிறந்த தேசமான பாலஸ்தீனத்தில் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுவது என்று, ஆரம்பகாலத்தில் எங்களுக்கொரு எண்ணமிருந்தது. அதற்கென்ன வழிவகைகள் உள்ளது என்று பார்க்கத்தான், போனேன். அப்போது பிரிட்டிஷாரின் பிடியிலிருந்த பாலஸ்தீனம், குழப்ப நிலையிலிருந்தது.



ஜெனரல் முல்லர்
மிகவும் கெட்டிக்காரன்! இவன், இன்னும் அகப்படவேயில்லை.

என்னை அங்கே, தங்க விடமுடியாதென பிரிட்டிஷார், மறுத்தனர் யூதர்கள், தமக்கென்று நாடு வேண்டுமென, அங்கு பாடுபட்டுக் கொண்டிருந்த பாட்டினைக்கண்டு மகிழ்ந்தேன்! யூதர்களுடைய முயற்சியை நான் மனதுக்குள் ரசித்தேன்!!

பலாத்காரமாக வெளியேற்றுவதின் மூலம், ஜெர்மனியிலிருந்த யூதர்களின் பிரச்னைக்கு ஒரு முடிவு காணலாம் என்றே போருக்குமுன் நாங்கள் எண்ணினோம். இதை, 'துரதிர்ஷ்டவசமாக' யூதர்கள் ஒப்பவில்லை! அதோடு சீக்கிரம், இந்த ஹிட்லர் தொலைந்து அவன் ஆட்சி ஒழிந்துவிடும் என்று அவர்கள் நம்பினார்கள். 1933 கணக்குப்படி அப்போது ஜெர்மனியில் மட்டும் சுமார் அறுபதுலட்சம் யூதர்கள் தான் இருந்தார்கள்.

யூதர்களைப் பார்த்ததும் அடையாளம் தெரிந்து கொள்வதற்காக சட்டைகளில் மஞ்சள் நட்சத்திரம் போன்ற குறியை அணியும்படி ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த ஏற்பாட்டைச் செய்தது, ஜெர்மனியின் விளம்பர மந்திரி சபையாயாகும். இதையொட்டி எனக்கு ஏராளமான மஞ்சள் நிற ஆடைகளும், மஞ்சள் நட்சத்திர குறிகளும் வந்தன. நான் இதை யூதர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்தேன். இதன் நோக்கம், எவனுவது ஒரு யூதன் ஆபத்திலோ வம்பிலோ மாட்டிக் கொண்டால், அவனை, எந்த ஜெர்மானியரும் காப்பாற்றப் போகாமலிருக்க வேண்டும் என்பதுதான். அப்படி உதவிச் செய்யப்போகும் ஜெர்மானியன் தனக்குத் தண்டனை கிடைக்கும் என்பதை அறிவான். இவ்விதம் ஜெர்மானியரைப் பயமுறுத்தவே, இந்த அடையாளக் குறியை அரசு புகுத்தியது.

1938 ஆம் ஆண்டு! ஆஸ்திரியா நாட்டை வென்று, ஜெர்மனியுடன் சேர்த்தோம். ஆஸ்திரியாவின் தலைநகரமான வியன்னாவில், என் அலுவலகத்தை அமைத்துக்கொண்டு, அங்கிருந்து யூதர்களை வெளியேற்றும் வேலையை செய்யும்படி ஜெனரல் ஹெய்டிரிச், உத்திரவு போட்டார் எனக்கு ஆஸ்திரியாவிலிருந்த யூதர்களின் வாழ்க்கை முறை, முழுதும் சீர்குலைந்திருந்தது. யூதர்களுடைய சங்கங்கள் கலைக்கப்பட்டு, அவர்களுடைய தலைவர்கள் கைது செய்யப்பட்டுச் சிறைகளில் அடைக்கப்பட்டிருந்தார்கள். யூதர்களை வெளியேற்றுவதுபற்றி யோசிப்பதற்காக இத்தலைவர்களை அழைத்து நான் கலந்தேன். இதன்படி வியன்னாவிலிருந்து வெளியேறிய யூதர்களை, அவர்தம் வீட்டுச் சாமான்களை எடுத்துக்கொண்டுபோக நான் அனுமதித்தேன்.

இதுபோன்ற முக்கியமான காரியங்களைச் செய்தது "எஸ். எஸ்." படையென்பதாகும். ஹிட்லரால் நிறுவப்பட்ட இப்படையே, நாஜிக் கட்சிக்கு மிக முக்கியமானதாக விளங்கியது. அடுத்தது "கெஸ்டபோ" என்று கூறப்பட்டதாகும். இது, பெரிய ஒற்றர் படையாகும். இரண்டுக்கும் ஹிட்லரின் ஆட்சியில் பொறுப்பாளராகயிருந்த அமைச்சர் ஹிம்ளர் என்பவராகும்.

கெஸ்டபோ ஒற்றர் படையினர் மூலம், தினசரி ஐரோப்பாவில் எங்கு என்ன நடக்கிறது என்பதை இவர், அறிவார். மிகவும் திறமைசாலியான ஹிட்லர்தான்' யூதர்களுடைய பிரச்னையின், தலைமை அமைச்சராகும். இவர், ஒரு தடவைகூட, எழுத்தால் உத்திரவு போட்டதில்லை. "இப்படி ஹிட்லர் நினைக்கிறார். இப்படி நீங்கள் செய்யவேண்டும்", என்று வாய் வார்த்தையாகவே எந்தக் கட்டளைகளையும் பிறப்பிப்பார்! என்னுடைய 'எஸ். எஸ்." தலைவர்களும் நானும், யூதர்களின் கோயில்களை இடிப்பதையும், சொத்துக்களை வாரி வீதியிலிறைப்பதையும், இந்தச் சமயம் விரும்பவுமில்லை; அனுமதிக்கவுமில்லை.

1940-ல் ஜெர்மனி, பிரான்சை வீழ்த்தியதும், அங்குள்ள யூதர்களை மடகாஸ்கர் தீவில் கொண்டு போய்க் குடியேற்றலாமென யோசித்தோம். ஆனால், எண்ணியபடி, எங்களால், அந்தச் சமயம் மடகாஸ்கர் தீவைப் பிடிக்க முடியவில்லை. அதையொட்டிப் பிறகு போரின் காரணமாக ஏற்பட்ட விளைவுகளால், எங்களுடைய முறையே மாறலாயிற்று! அரசியல் பிரச்னையாக இதுவரை யூதர்களைக் கருதிய நிலைமாறி, அவர்களைத் "தீர்த்துக்கட்டுவது" என்கிற முடிவுக்கு ஹிட்லரே வந்தார். ஏன் இந்த முடிவுக்கு வந்தார் என்பது எனக்குத் தெரியாது! ஆனால், நாங்கள் எதிர்பார்த்தது போல் ரஷியாவில் வெற்றிமேல் வெற்றி குவியவில்லை. ஒரு பக்கம் ரஷியாவிலும், இன்னொரு பக்கம் ஐரோப்பாவிலும், இரு முனைகளில் போராடிக் கொண்டிருந்தன ஜெர்மன் படைகள். இந்தச் சமயம் பார்த்து உலக யூதர்களின் தலைவரான டாக்டர் வீஸ்மென் என்பார், ஜெர்மனி ஒழியவேண்டும் என்று அறிவித்தார்! இப்படிப்பட்ட அறிவிப்பு ஹிட்லர் மனதைத் துளைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

யூதர்கள் எங்கும்போக அனுமதிக்கக்கூடாது, என்றார் ஹிம்ளர். இப்போதிலிருந்துதான், "அவர்களைத் தீர்க்கும்" கட்டம் தீவிரமாகியது. அதுமுதல் யூதர்களை, ஒரே இடத்தில் கொண்டு வந்து சேர்க்கும் பொறுப்பு எனக்கு வந்தது. 1942 பெர்லினில் கூடி இதுபற்றி விவாதித்தோம். என்னுடைய பொறுப்பெல்லாம், நாங்கள் வென்ற நாடுகளிலுள்ள, யூதர்களையெல்லாம், ரயில் மூலமோ, லாரி மூலமோ ஏற்றி அவர்களுக்கென்று நிர்மாணிக்கப்பட்ட தனிப் பிரதேசங்களுக்கு அனுப்புவதுதான். இதற்காக, என் இலாகாவின் கட்டளைப்படி நடக்க ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு 'ஆலோசகர்' நியமிக்கப்பட்டார். அவர், ஆங்காங்கு உள்ள சர்க்காருடைய ஒத்துழைப்புடன், யூதர்களைப் பற்றிய தகவல்களைச் சேகரித்து, அவர்களை ஒன்றுகூட்டி, அந்தந்த அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் ரயில் முதலியவைகளைப் பெற்று அவைகளில் ஏற்றி அனுப்ப வேண்டும்.

பிரான்சில் எங்கள் முயற்சிக்கு முழுமனதோடு போலீசார் ஒத்துழைக்கவில்லை. இத்தாலியிலும் இதே நிலைதான். பெல்ஜியமும், மிகவும் யோசித்தது. ஹாலந்தில் எத்தகைய ஒத்துழைப்பும் கிடைக்காது போலிருந்தது- ஏனெனில் அங்கே யார் டச்சுக்காரர்கள், யார் யூதர்கள் என்று கண்டுபிடிக்க இயலாதவாறு ஒன்றிப் போயிருந்தார்கள்,

ருமேனியா, எங்களுடன், யூதர்களை வெளியேற்றித் தருவதில் ஒத்துழைத்தது.

1941-ல் போலந்திலிருந்த மெய்டனக் எனும் கிராமத்துக்குப் போனேன். விவசாயிகள் குடிசைகள் போலக் கட்டப்பட்டிருந்த சில இடங்களைப் பார்த்தேன். அவைகளுக்குள் காற்றோ, வெளிச்சமோ போகாது. இதற்குள் யூதர்களை அடைத்து, அங்கே பொருத்தப்பட்டிருந்த குழாய் மூலம் நச்சு வாயுவை அனுப்பி, அப்படியே சாகடிப்பது என்று என்னிடம் சொல்லப்பட்டது. இப்படியெல்லாம் செய்ய முடியுமா என்றே, என்னிடம் சொல்லப்பட்டபோது நான் சந்தேகப்பட்டேன்.



ஹிம்ளர்
தன் அறையிலிருந்தபடியே, ஐரோப்பாவில் நடப்பதைத்தெரிந்து கொள்வான். ஹிட்லரின் முக்கிய சகா.

மின்ஸ் எனுமிடத்தில்தான், யூதர்களை எப்படித் தீர்த்துக்கட்டுகிறார்கள் என்பதை நான் காண நேர்ந்தது. ஜெனரல் முல்லர் என்னை அனுப்பியிருந்தார். நான் அங்கே போன சமயம் 5000 யூதர்கள் மறுநாள் காலையில் தீர்த்துக் கட்டப்பட்டிருந்தார்கள்.

மறுநாள் காலையில் கிளம்பிய நான் ஓடினேன். ஆனால், நான்

(தொடர்ச்சி 10-ம் பக்கம்)



ஹெய்டிரிச்

# சம்பத்தின் கொள்கை மோசடி !

# கபடம் ! வஞ்சனை ! சுயநலம் !

திராவிடத்தை விடுவிக்கும் தி. மு. க. அபேட்சகனாகிய என்னை ஆதரியுங்கள் என்றுதான் சம்பத் தேர்தலில் வோட்டர்களை வேண்டினார்---வோட்டும் கிடைத்தது—எம். பி. ஆனார்.

கடந்த பல வருடங்களாக 'திராவிட நாடு' என்ற கொள்கைக்கு அண்ணனாக இருந்துவிட்டு இப்பொழுது குபீரென்று 'திராவிட நாடு' என் தம்பிஅல்ல-அப்படி ஒரு தம்பியேஎனக்கில்லை என்று பொறுப்பை உதறிவிட்டு, தமிழ்நாடு என்ற மகன் எனக்குப் பிறந்தவன் என்று புதுப் பொறுப்பை ஏற்றால் அதற்கும் தலைஅசைக்க முடியுமா?

திராவிட நாடு, அசாத்தியம் என்று திடீர்ப்புத்தி வந்தது—அதை விட்டு விட்டு, தமிழ்நாடு கேட்கிறேன் கை கொடுங்கள் என்று கேட்டால், கைகொடுக்க பலர் யோசித்தாலும், சிலர் கரகோஷமாவதுசெய்வார்கள் அதில் ஒரு அளவுக்கு நியாயமும் இருக்கிறது.

ஏனெனில், நாட்டுக்குப் பொதுவான கொள்கை வகுப்பதில் ஆரம்ப காலப் புத்தியே அதை வளர்க்கும்போதும் இருக்குமென்று சொல்ல முடியாது. பொதுவான கொள்கை வகுக்கும்போதுமுக்காலச் சூழ்நிலைகளையும் உள்ளறிந்து, உட்படுத்தி அதற்கேற்ப, கொள்கை நிறைவேற்றத்துக்குத் தடமும் போட்டுக் கொள்ளவேண்டும். அதனன்றி அன்றையச் சூழ்நிலையை மட்டும் வைத்து கொள்கை வகுத்தால். மறுநாள் சூழ்நிலை மாறுகிறபோது கொள்கையும் குழையும்

மேலும் அவசியத்துக்காக தனது போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வதுகூட அரசியல் வாதிக்கு நல்லதுதான் என்று லெனினே சொல்லுகிறார்.

51-ல் திராவிட நாட்டுக்கு கொள்கை வகுத்தோம். ஆனால் 61--க்கு அது லாயக்காக இல்லை என்று 61-ல்தான் தெரிந்தேன்-விலகுகிறேன் என்று சம்பத் சொன்னால் அவரை அரசியல் தலைவராக ஏற்க முடியாதுபோனாலும் அரசியலின் மேல்வகுப்பு மாணவனாக கொள்ளலாம்.

ஆனால் இவர் காங்கிரசின்புறக்கடைத் தாழ்வாரமான தமிழ்தேசியத்தின் காலடியில் நின்றுகொண்டு,

எனக்கு, 'திராவிட நாடு' ஒரு மாயை - கனவு - ஒரு போதும் கிடைக்காது—என்று அப்பொழுதே! அதாவது 51லேயே தெரியும்,

**"கண்ணகி"**

என்று தனது 51ம் வருடத்திய தீர்க்க தரிசனத்தை 61-ம் வருடத்தில் விளம்பரம் செய்தால் இதைவிட கொள்கை மோசடி- நம்பிக்கைத்துரோகம் அரசியலில் வேறு இருக்க முடியுமா?

கிடைக்காது என்று பத்துவருடங்களுக்கு முன்பே தெரிந்த ஒரு கொள்கையை, பத்து வருடங்களாய் மக்களிடமும் தன்னை மதித்து நம்பி நிற்கிற கட்சி ஊழியரிடமும் வெளியிடாமல் இருந்ததே அரசியலில் சகிக்கமுடியாத தவறு.

அந்தத் தவறு செய்த சம்பத், அதற்கு அநுகுணமாக, கடந்த பத்து வருடங்களாய் திராவிட நாடு எங்கள்மூச்சு, அதைப்பெறுகிறவரை அயரோம் என்றெல்லாம் மேடைவிடாமல்பேசி அதே, கட்சி மூலம் எம். பி, ஸ்தானத்தையும் பெற்றுக்கொண்டுநான்கு வருடங்களாய் மாதம் 590 ரூ. எம். பி. சம்பளத்தையும் வாங்கிக் கொண்டே, திராவிட நாடு கனவு—அதுவும் இராக் கனவுகூட அல்ல பகற்கனவு-திரகவிடநாடு என்று சொல்லி தி. மு. க. தலைவர்கள் மக்களை ஏமாற்றுகிறார்கள் என்று உதடுதெறிக்கப் பேசுவது அதைவிடக் கொடுமையான—பொறுக்கவோ — மன்னிக்கவோ முடியாத—இரட்டைமாதவறு!

இவர் ஒரு அரசியல் வாதியாம்! —இவருக்கொரு கட்சியாம்.

உருவாக்க முடியாது என்று 10 வருடங்களுக்கு முன்பு தெரிந்துகொண்ட ஒரு தலைவர், அதைச் சொல்லியே ஊழியர்களை நம்ப வைத்துவிட்டு, பிறகு நடுத்தெருவில் அவர்களை விட்டு விட்டு புது டேராவுக்குள் போவோம் வாருங்கள் என்று அழைத்தால் எவன் வருவான்?

இன்னும் 2 வருடம் கழித்து தமிழ்நாடுசாத்தியமில்லை கொங்கு நாடு கேட்போம் என்று இதே சம்பத் சொல்லமாட்டர் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

இத்தகைய இவர் சொல்கிறார் தி. மு. தலைவர்கள் யோக்கியர் அல்ல! முரடர்கள் என்று!

இவர் தடத்திலேயே போய்ப் பார்த்தாலுமே தி. மு. க. தலைவர்கள் தவறானவர்கள் என்று தெரிவதாகவே வைத்துக் கொள்வோம். இந்தத் தவறா,னவர்களைப் பார்த்துவிட்டுத் திரும்பினால்இந்த சம்பத் சாக்ஷாத்காரமாய் நிற்கிறார் பார்க்கிறோம். இந்த சம்பத் இரட்டைத்தவறானவராகத்தெரிகிறாரே அதனால் நாடு அஞ்சுகிறது.

இரட்டைத் தவறான ஒருவர் ஒற்றைத் தவறானவர்களை ஒழிக்கிறேன் என்றால், அது என்ன நெறி? அதற்கு உதவி கிடைக்குமா? ஒற்றைத் தவறை ஒழிக்க இரட்டை தவறுக்கு உதவினால் அதனால்பல இரட்டைத் தவறுகளைக் குட்டிபோடும் என்றுநாடு கருததா?

திராவிடநாடு கிடைக்காது என்று பத்து வருடங்களுக்குமுன் கண்டுபிடித்த சம்பத்து, தமிழ் தேசியத்தைக் கண்டு பிடிக்க பத்து வருடம் தேவைப் பட்டிருக்கிறது. அவர் கேட்கிற தமிழ்நாடு அடுத்த பத்து வருடங்களில் கொங்கு நாடகக் குறையும் என்பதற்குத்தான் அதிக உத்திர வாதம் காண்கிறது.

தமிழுக்கு ஒரு தேசியத்தைக் கண்டுபிடிப்பதற்காக, பத்து வருடங்களாய், திராவிடநாடு கொள்கையின் தயவில் வாழ்ந்திருக்கிற ஒருவரை அசலான மோசடிக் காரர் என்று நாடு மதிக்குமே அல்லாது அரசியல்வாதி என்று ஒருபோதும் மதிக்காது.

இவ்வளவு தைரியமாக கொள்கை மோசடி செய்கிறவர்கள், தி. மு. க.வில் இருப்பார்கள் என்று சம்பத் சொல்வதை யார் நம்புவது? கொள்கை மோசடி செய்யும் ஓரிருவர் தலைமையிலேயே வளர்கிறார்கள்-வாழ்கிறார்கள் என்பதைக்கூடத் தெரிந்து கொள்ளாமல், தெரிந்துகொள்ள முயற்சிக்காமல் எல்லோரும் யோக்கியர்கள்தான் என்று நம்பி இருந்த தி. மு. க. தலைவர்கள், சம்பத் — கண்ணதாசனின் கொள்கை மோசடிக் கலையை எங்கே கற்றுக் கொள்ளப் போகிறார்கள்-கற்றுக் கொடுக்கத்தான் சம்பத்தும், கண்ணதாசனும் கழகத்தில் இல்லையே—கட்சிக்கல்லவா போயவிட்டார்கள்?

தனது கொள்கை மோசடிக்கு, தோழர் சம்பத், டாக்டர் அம்பேத்காரின் செயல்மூலம், புதிய ஊட்டத்தையும் கொடுத்து அழுத்தப் படுத்துகிறார்.

அதாவது:

டாக்டர் அம்பேத்கார்தான் அகில இந்தியாவுக்கு அரசியல் நிர்ணயச் சட்டத்தைத் தயாரித்தார். ஆனால் பிறகு அவரே: அவர் தயாரித்த அரசியல் நிர்ணயச் சட்டத்தைக் கிழித்தெறிய வேண்டும் என்று பேசினார்.

ஆகவே நான்தான் 'திராவிட நாடு' கொள்கைக்கு வித்திட்டேன்—பாத்தி கட்டினேன்—வேலி வைத்தேன்—அது அப் அப்பொழுது! இப்பொழுது! பித்தலாட்டம், ஏமாற்று வித்தை என்று நானே சொல்லுகிறேன்.

அம்பேத்கார் சொல்லும்போது நான் சொல்லக்கூடாதா? அது தவறாகுமா?

என்று துரதிர்ஷ்டம் பிடித்த இந்த அப்பாவி நாட்டைப் பார்த்

(8-ம் பக்கம் பார்க்க)

## கவிஞரே !

கண்ணனுக்குத் தாசனென்ற பெயருடனே
அண்ணாவின் பெயர்சொல்லி வளர்ந்தவரே !
கூத்தாடி என்றுஎம் கலைஞர்களை
கூசாமல் பேசுகின்றாய் எழுதுகின்றாய்,
கூத்தாடி யானாலும் கொள்கையிலே
குன்றாத சிங்கங்கள் குறைமதியே !
கூறிடுவேன் இன்னுங்கேள் கொள்கைக்காக
கொடுத்திடுவார் ஆவியையும் போர்க்களத்தில்
போர்என்றால் எனக்கென்ன பங்குஎன்று
ஆர்த்தெழும் கலைஞர்எம் அணியிலுண்டு.
சிந்திக்கும் சக்திக்குநான் சொந்தக்காரன்
என்றெண்ணும் சிறுபிள்ளைத் தனமுனக்கு
ஏற்பட்டு விட்டதனால் வந்தக்குறை
எங்குதான் உமைப்போய் சேர்த்திடுமோ ?

(ப. இராமன் பி. எஸ். சி

# அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

ஒளி - 1 வெள்ளி 9-6-61 கதிர்- 14


## இடையிலே - ஒரே திங்கள்!

இடையிலே ஒரே ஒரு திங்களேயுள்ளது—எப்படித்தான் எல்லாக் காரியங்களையும் ஆற்றப்போகிறேமோ, என்று பெருமூச்சு விடுகிறர் வரவேற்புக் கழகத் தலைவர் மதுரை முத்து! நல்ல நடிப்பு சார்—இவர் 'வேடம்' போடுகிறர்—என்னென்ன ஏற்பாடுகள் மதுரையில் நடக்கின்றன தெரியுமா என்கிறர் மாநாட்டுச் செயலாளர்களில் ஒருவராகிய அன்பில் தருமு!! மாநாட்டு நிர்வாகிகள், விடுத்திடும் அறிக்கைகள், நமது மாநில மாநாட்டுக்கான சகல ஏற்பாடுகளு , வெகுவிரைவாக நடப்பதைச் சொல்லுகின்றன. கலைக் கண்காட்சிக் குழுவினரோ, சென்னை 'தென்னகம்' அலுவலகத்தைத் தங்கள் இருப்பிடமாக அமைத்துக்கொண்டு, எமது பொறுப்பினை எவ்வளவு செம்மையுடன் செய்யப்போகிறேம் பாருங்கள், என்கிறர்கள்! பார்த்தசாரதியும், செழியனும், பொன்னுவேலுவும், ராஜாராமும் அடிக்கடி அண்ணாவைக் கலந்து, ஆவன செய்து வருகிறர்கள்-கலைக்காட்சியை, விலைமதிப்பில்லாத ஒன்றெனச் சொல்லும் படியாக்க. வெளிநாட்டுத் தூதராலயங்களுக்கும் எழுதியுள்ளனராம் பங்கேற்கும்படி!

நாடெங்கும் தனி ரயில்கள் விடவேண்டுமென்றும் அரசியலாருக்கு வேண்டுகோள் விடப்பட்டிருக்கிறதாம்!! "ரயிலென்ன சார்? எங்கள் காஞ்சியிலிருந்துமட்டும் பத்து பஸ் கிளம்பமுடியும். பஸ்தான் இடைக்கவில்லை. எப்படியும், ஐந்து பஸ்களாவது போகும்", என்கிறர், சி, வி.எம் அண்ணாமலை.

"நாங்கள் மட்டும் என்ன! அதேயோசனையுடன்தானிருக்கிறேம்", என்கிறர், அன்று, இங்கே வந்திருந்த உடுமலை நாராயணன். இப்படி மாநில மாநாடு பற்றிய, உற்சாகமும் பரபரப்பும் இப்போதே ஏற்படத் துவங்கியிருக்கிறது!

இதுபற்றி, சென்னை வந்து, அண்ணாவையும் பொருளாளரையும், தலைமை நிலையச் செயலாளர்களையும் கலந்துகொண்டு செயல்படுகின்றனர்—மாநாட்டு, நிர்வாகிகள். பிறமாவட்டத்தினரும், நாங்கள் என்ன செய்யவேண்டுமென்று யோசனை கேட்டுச் செல்லுகின்றனர். இடையிலே, ஒரு திங்கள்! முப்பதே நாள்!!

தோழர் முத்து, விடும் பெருமூச்சில், பொருளில்லாமலில்லை. முன்பெல்லாம் ஏதோ மாநாடென்றால், பத்தாயிரம், இருபதாயிரம் பேரோடு முடிந்துவிடும். இப்போது, இலட்சக்கணக்கிலல்லவா, மக்கள் கூடுகிறர்கள். அதுவும், இம்மாநாட்டுக்கு, எத்தனை லட்சங்கள் வரப் போகிறர்களோ?

மாநிலத்தின் மையமான மதுரை என்பதால், எல்லா மாவட்டங்களிலிருந்தும் மக்கள் வருவார்கள்! கழகத் தோழர்களைப் பற்றித்தான் கேட்கவேண்டாமே!! அத்தனை லட்சம் மக்களுக்கும் பந்தல், இடவசதி, உணவு, தண்ணீர் முதலியவைகளை ஏற்பாடுசெய்வது எளிதான பொறுப்பா? அதுவும், மாநாடு, ஒருநாள், இரண்டு நாளல்ல! நான்கு நாட்கள்—ஜூலை 13, 14, 15, 16 ஆகிய தேதிகளில்—சாதாரணமானதா இது!!

இதற்கென எத்தனைத் தொண்டர்களை திரட்டினும் போதுமோ? நம்மிடம் அரசா இருக்கிறது! வசதிகளைப் பெற!! சீமான்களாயிருக்கிறர்கள்—செலவுக்கு ஏன் அஞ்சுகிறய்? இந்தாப் பணம் என்று கொடுக்க! ஆர்வம்தான், நமக்கு எல்லாம். அந்த ஆர்வத்தோடு நடைபெறவிருக்கும் இந்த மாநில மாநாடு, பலவழிகளில் தனித்தன்மை பெற்றதாகும்!

இப்போதே, வருவதற்கான வசதிகளை, செய்யத் தயாராகுங்கள்—நான்கு நாட்கள், மதுரையில் தங்கவேண்டும்—சகோதரர்களே! இப்போதே, தயாராகுங்கள்—இடையிலிருப்பது ஒரு திங்கள்தான்! ஓடிவிடும்—இப்போதே ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பியுங்கள்!!

*— 0— *—




## தொடர் கதை--3

பாலாமணி யென்கிற பாலுவைப்பற்றி வர்ணிக்க வேண்டுமானல், ஒரே வரியில் 'உத்தமி' எனலாம். குணம், தங்கம். நிறமும் அப்படியே. அப்படிப்பட்ட பாலுவுக்கு, அடாவடிப் பேர்வழியான ஜானகிராமன்மீது கொள்ளை ஆசை. "அத்தான்! இதெல்லாம் எதற்குத்தான்? ஊரில் பல பேர் பல மாதிரியாகப் பேசுகிறர்களே! கேட்பதற்குத் தலையிறக்கமா யிருக்குறது அத்தான்: வேண்டாமத்தான்! என்னத்தான்! ஏனத்தான்!" என்று ஜானகியைப் பார்க்கும்போதெல்லாம், சொல்ல வேண்டுமென்று எண்ணுவாள் பாலு, ஆனல் சொல்லமாட்டாள்! அத்தானின் உள்ளம், அதனுல் வாடிவிடுமோ என்று எண்ணக்கூடிய வனிதாமணி அவள்! இறந்துபோய்விட்ட அவளுடைய தாய், எப்போதோ சொன்னது, அவள் மனதில் ஆழப் பதிந்து விட்டது. பள்ளிக்கூடத்திலிருந்து அவளைக் கல்லூரிப் படிப்புக்கு அனுப்ப வேண்டுமென்று ஆலாய்ப் பறந்தார், அருமை நாயகம் என்கிற அவளுடைய அப்பா. அருமை நாயகம் மிலிடரி காண்டிராக்டராகயிருந்து, நிறையச் செல்வம் சம்பாதித்தவர். மிலிடரி காண்டிராக்டராயிருந்த நேரத்தில், இராணுவ அதிகாரிகளோடும், இராணுவ முறைகளோடும் மிகவும் நெருக்கமாகப் பழகியவர். பழகியது மட்டுமின்றி, அதே போல வாழ வேண்டுமென்றும் விரும்பியவர். அதனுல் அவரிடம் எதையெடுத்தாலும் கண்டிப்புதான்! மேலதிகாரியின் உத்திரவைமீறிய இராணுவ வீரனுக்குக் கசையடி கவாத்து, பட்டினி என்று தண்டனை தருவார்கள். அதைப் போல வேலைக்காரார்களுக்கு இவர் தண்டனை தரமுடியும். இவருடைய உத்திரவை, இவர் மனைவி மீறும்போது என்ன செய்வது? எப்படி தண்டிக்க முடியும். அதனுல், தானே 'தண்டனை'யை அனுபவிப்பார். அத்தண்டனையின் அளவு சாப்பிடாமல் உண்ணாவிரதம் இருப்பது!! யார் போய் தடுத்தாலும் நடக்காது. வீட்டில் சாப்பிடவே மாட்டார். அது போன்ற சமயங்களில் பாலுவின் மனம் பாகாய் உருகும்!"

"என்னம்மாயிது! நீதான், கொஞ்சம் தணிந்துபோய் அப்பாவைச் சாப்பிடச் சொல்லேன்", என்று கெஞ்சுவாள். ஆனல், அவள் தாய் அலமேலுக்கு நன்ருகத் தெரியும், ஆள் எங்கோ ஓட்டலில அமுக்கிவிட்டு வந்து உண்ணுவிரதமிருக்கிறர் வீட்டிலென்று. அதனல், "போடி பாலு! உன்னப்பாவாவது ஒருவேளை சாப்பிடாமலிருப்பதாவது. அவரால் முடியாதென்றுஎனக்குத் தெரியும் அவர்தொந்தியைப்பார். சாப்பிடாத ஆள்போலவா யிருக்கிறது. குண்டிகாய்ந்தால் குதிரையும் வைக்கோல் தின்கும்! நீ போய் உன் வேலையைப் பாரடி!,! என்று சொல்லி விடுவாள்.

அதுபோன்ற சமயங்களில் பாலுவின் பாடுதான் திண்டாட்டமாகும்! உண்மையில், அவள் அப்பா சாப்பிடவில்லையே தானும், என்று சாப்பிடாமலிருப்பாள். இப்படி அவள் செய்வாள்என்பது திருவாளர் அருமை நாயகத்துக்குத் தெரியும். அதனுல் அசைச் சாக்கிட்டு 'தண்டனை'யை ரத்து செய்துவிடுவார்.

ஒரே மகளான பாலுவை, ஒய்யாரமாகக் கல்லூரிக்கு அனுப்ப வேண்டுமென்றுஆசைப் பட்டார் அருமைநாயகம். ஆனல் அவர் மனைவியோ, "எதுக்குங்க காலேஜ்? எங்கே போய் உத்தியோகம் பண்ணப் போரு இவ! என்னைக்கிருந்தாலும் எங்கண்ணன் மகன் ஜானகியைக் சட்டிக்கிட்டு வாழ வேண்டியவதானே. அதெல்லாம் படிப்பு கிடிப்பு ஒன்றும் வேண்டாங்க" என்று தடை போட்டாள். அருமைநாயகம் குதித்தார்! வழக்கம்போல், தன் உத்திரவை மீறியமைக்காக 'தண்டனை' அளித்தார்! இந்தச் சமயம் இரண்டு மூன்றுநாட்கன் உண்ணாவிரதம் நீடித்தது. உண்மையான உண்ணாவிரதமுமாயிற்று இச்சமயம்! ஏனெனில், ஊரிலிருந்த ஓட்டல் தொழிலாளர்கள் "ஸ்டிரைக்" செய்து விட்டதால் எல்லா ஓட்டலும் மூடிவிட்டார்கள். என்ன செய்வது? இந்தச் சமயம் பார்த்துத்தான் அலமேலு, அவருக்குப் பிடித்தமான அவல்கேசரி மூக்கைத் துளைக்கும் மசால்வடை அருமையான மோர்க்குழம்பு முதலியவைகளை வீட்டில் வைக்கலானுள்! பொறுக்க முடியாத அருமை நாயகம், "ஏண்டா! பாலு. நீ என்னடா, சொல்றே, உன் அம்மா இப்படிச் சொல்ருளே," என்று கேட்டார்.

'இவள் என்றைக்காவது, ஜானகியோடு வாழ வேண்டியவள்'தானே என்ற வார்த்தையைக் கேட்டது முதல், தான் கல்லூரிக்குப் போக வேண்டு மென ஆசையை மூட்டை கட்டி வைப்பது என்கிற முடிவுக்கு வந்துவிட்டாள், பாலாமணி. அதற்கும் ஒரு காரணமிருந்தது! அந்த ஆண்டு இண்டர்மீடியட் வகுப்பில் ஜானகி தேறவில்லை. கல்லூரிக்கே அவன் வரக்கூடாதென்றும் கண்டிப்பான உத்தரவு போட்டுவிட்டாராம், பிரின்சிபால். கையில் பீர் பாட்டிலும், அறைக்குள் மல்லிகைச் சரம் காலையில் கூட்டினுல் கிடைக்கும்படியான முறையிலும் வாழும் ஒரு மாணவனை எத்தனை நாளைக்குத்தான் ஒரு பிரின்சிபால் சகிக்க முடியும் அப்பப்பா படித்த இரண்டு ஆண்டுகளிலும், என்னென்ன ஆட்டம் போட்டான் ஜானகி என்பதை, இப்போது கேட்டாலும் கல்லூரியின் பியூன்கள் சொல்லுவார்கள்!!

இந்தச் சூழ்நிலையில், ஜானகியைவிடத் தான் அதிகம்படித்து என்ன பயன் என்றெண்ணினுள் பாலுஅவளுக்குசிறுவயதுமுதலே அவன்மீதுஆசையுண்டு! அம்மா அதை வெளிப்படையாகச்சொல்லவே, 'அவன்தான், தன்கணவன்' என்கிற ஆழமான எண்ணத்தைத்தன் இருதயத்திலே வளர்த்துக்கொண்டு விட்டாள் பாலு!!

அதனுல், அவள் கல்லூரிக்குப் போக வேண்டிய அவசியம் இல்லாமற் போய்விட்டது. அருமை

**அண்ணல்**

நாயகத்துக்குப் பெரிய மனக்குறைதான் என்ருலும் அதே ஆண்டு' திடீரென்று மாரடைப்பின் காரணமாக அலமேலு 'தவறி'விடவே, அந்தச் சோகம் வந்து இந்தச் சோகத்தை ஓரளவ போக்கியது என்ருலும் தன் ஆசை மகளுக்கு கணவனுக வர வேண்டியஜானகிராமனைப்பற்றிய சேதிகளைக் கேள்விப்பட கேள்விபட மிகவும் மனம் நொந்து, பழைய உற்சாகமோ—சிரிப்போ இல்லாமல் ஆள் உள்ளுக்குள்ளே உருகி வந்தார். இந்த அப்பாவிப் பெண்ணுவது, 'அப்பா! உங்களுக்குப் பிடித்தமான ஒரு வரனைப் பாருங்கள்' என்று சொல்லக் கூடாதா. இறந்துபோனத் தன்னுடைய தாயைப் போலவே, ஜானகியின் விஷயத்தில் இவளும் பிடிவாதமாயிருந்தாள். ஒவ்வொராண்டும் கலியாணம் நடக்காமலேயே தள்ளிக்கொண்டு வந்தது இந்த ஆண்டு எப்படியும் திருமணம் நடத்தி விடுவதென்கிற முடிவுக்கு வந்தார் அருமை நாயகம்.

இவர் போய்க் கேட்டுச் சம்மதிக்கக்கூடியவனு ஜானகி? மனிதனுடைய மனம்—உண்மையிலே ஒரு குரங்குதான்! இல்லையென்ருல் அருகே சுவையுள்ள பலாப் பழமிருக்க, சொறிப் பழங்களுக்கு அலைவானு ஜானகி?

அவனைச் சத்தித்து சம்மதம் பெற்று வருவதாகச் சொல்லி விட்டுத்தான், பாலாமணி வந்தாள் ஜானகி வீட்டுக்கு! அப்போதுதான் அருமை நண்பன் 'கற்பனை'க் கமலாவின் திட்டப்படி, கையில் ஓங்கிய அரிவாளுடன், உடம்பெல்லாம் உதிரமாக நின்ருன் ஜானகி!! எப்படியிருந்திருக்கும் அந்த ஏந்திழைக்கு? "ஐயோ அப்பா!" என்றுஅலறிக் கொண்டு, ஓடினுள். வாசலில், மகளை உள்ளே அனுப்பிவிட்டு காரில் உட்கார்ந்திருந்த அருமை நாயகம், பதறிப்போய் 'என்னம்மா" என்று ஓடிவந்தவர், ஜானகியின் திருக்கோலம் கண்டார். திகைத்தார். எவ்வளவு பெரிய மிலிடெரி கண்டிராக்டராயிருந்தென்ன? அந்தக் கோலத்தில் ஜானகியைப் பார்க்க, என்ன செய்வதென்று அவருக்குப் புரியவில்லை. அவன்தான் ஒரு கிறுக்கனுச்சே! அர்த்தமில்லாமல் இந்த வம்பில் நம்மையும் நமது மகளையும் மாட்டி வைத்து விட்டானுனல் என்ன செய்வது?

கண்ணீரும் பயமும் கலக்க 'திக்பிரமை' பிடித்தவளைப் போலிருந்த மகளைக் காருக்குள் தள்ளி, இந்த இடத்தைவிட்டு ஓடினுல் போதும் என்று வேகமாகக் காரை விட்டார். அவர் மனம் ஒரு நிலையில் இல்லை. அதனுல், 'பீட்' நின்று கொண்டிருந்த போலீஸ் பெரியசாமியின் கையைக்கூடக் கவனிக்காமல் கார் பறந்தது! கொஞ்சம் தவறியிருந்தால், இன்னெரு கார் மோதியிருக்கும். நல்ல வேளையாக, 'பிரேக்' போட்டு நிறுத்தினுர். தவருன முறையில் கார் ஓட்டியதற்காக, அருமைநாயகத்தை "சார்ஜ்" செய்ய அவசரமாக வந்தார் போலீஸ் பெரியசாமி.

அவரைப் பார்த்ததும், வேறென்றும் சொல்லவில்லை, அருமைநாயகம். "கொலை! கொலை! படுகொலை! ஜானகி வீட்டில்," என்று குளறியபடியே, வார்த்தைகள் வந்தன. கார் பறந்தது. கான்ஸ்டேபிள் திகைத்தார் கொலை! கொலை!! எங்கே? ஜானகி வீட்டில்!— கேட்டதை உடனே, தன் மேலதிகாரிக்குத் தெரிவிப்பது எப்படி என்று யோசித்துக் கொண்டிருந்த சமயம், "ஏ! 304...உன் டூட்டி என்ன? ஏன் நடு ரோட்டில் நிக்கிறே?" என்கிற சப்-இன்ஸ்பெக்டர் சாந்த மூர்த்தியின் அதட்டல் கேட்டது. ஜானகி வீட்டில் பெரிய 'மர்டராம் சார்... அவுங்க மாமா சொல்லிவிட்டு ஓடுருர் சார்..." என்ருன் அவரிடம். ஜானகி—கமலா விஷயம்என்ருல் சாந்தமூர்த்திக்கு அச்சம்! 'அப்படியா?' என்று கேட்டபடி காவல் நிலையம் போய், ஏழெட்டுப் போலீசாரும் லாரியுமாய் விரைந்தார் ஜானகி வீட்டுக்கு!

"வாங்க சார் வாங்க. என்னடா இன்னும் காணுமேன்னுதான் நிக்கிறேன் சார்! என் சிநேகிதன் கமலாவை நான் 'மர்டர்' பண்ணி, ஆத்திலே கொண்டு போய் போட்டுவிட்டேன். என்னை அரெஸ்ட் பண்ணுங்க..." என்று நின்ருன் சுந்தரமூர்த்தி. எதிர் பார்த்தது வேறு! ஓடுவான், தப்ப முயல்வான், துரத்த வேண்டும்: என்றெல்லாம் எண்ணி வந்தவருக்கு, அரிவாளும் கையுமாய் ஜானகியைக் கண்டதுமே, "இவனு கொலைசெய்தான்!" என்கிற ஆச்சரியம். ஆச்சரியத்தோடு ஆச்சரியம் சேர்ந்தது தான் கொலை செய்தவனென்று சொல்லித் தன்னை 'அரெஸ்ட்' செய்யுமாறு அவன் கூறியதும்!! வீட்டைச் சோதனையிடச்சொல்லி விட்டு, ஜானகியை போலீசார் வசம்ஒப்படைத்தார். ஜானகியும் கமலாவும் நடத்திய 'போலீச் சண்டை'யின் காரணமாக அங்கே ஒரு ரணகளம் முடிந்தது போலிருந்தது!

"எப்படிக் கொண்டுபோய் பிணத்தைப்போட்டீங்க...?" என்ருர் இன்ஸ்பெக்டர்.

"முதுகிலே தூக்கிட்டுப் போனேன்! அவனுக்கு வாதாட யாராச்சும் வந்தா அவுங்களையும் தீர்த்துக் கட்டலாமென்றுதான் காத்திருந்தேன். சீக்கிரம் என் மேலே 'கேஸ்' போடுங்கசார்..." என்ருன் காதல் பலியான ஜானகி.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் இந்தச் சேதி ஊரெங்கும் பரவவே ஒரே கூட்டமாகி வீட்டது! வீட்டுக்குப் போய்ச் சேர்ந்த அருமைநாயகம், அதிர்ச்சியால் மூர்ச்சையடைந்த தன் மகளைக் கவனிக்க டாக்டருக்கு ஆள விட்டுக் குழம்பிக் கிடந்தார் கமலாவின் வீட்டார் "அய்யோ! அய்யோ!!" என்று அலறிக்கொண்டு ஓடிவந்தார்கள். "அடப்பாவி! உன்கூட எப்படியிருந்தான் ... அவனைக் கொன்று விட்டாயே...," என்று சபித்தார்கள்! ஜானகியோ, சிரித்தான்! இவனுக்கு ஒருவேளை— பைத்தியம் பிடித்திருக்குமோ என்று சாந்தமூர்த்தி சந்தேகப் பட்டார். வீட்டைப் பூட்டி 'சீல்' வைத்தார்கள்! ஜானகி, போலீஸ் லாரியில் ஏற்றப்படுவதற்கு முன், இந்தச் செய்தியைக் கேள்விப் பட்ட அவனுடைய சித்தப்பா ஓடி வந்தார்! ஜானகியைக் கட்டுப்படுத்தக்கூடிய பெரியவர்கள் யாரும் கிடையாது, அவன் சித்தப்பாவைத் தவிர. அவர் ஒரு ராம பக்தர்: "ராம நாமமே கற்கண்டு! அதைச் சொல்லாத பேருக்கு எமகுண்டு!!" என்று பஜனை பண்ணுவதற்காக, தனக்குக் கிடைத்த பாகத்தில், ஒரு ராம மடத்தை ஏற்பாடு செய்து கொண்டு வாழ்ந்து வந்தார், சித்தப்பா சிவலிங்கம். அவருடைய பஜனை மடத்தில் வந்த ஒரு பாவையை முதல் பக்தையாக்கிக் கொண்டு—அதுவும் மோட்ச லோகம் செல்வதற்குச் செய்த ஏற்பாடு என்று சொல்லிவந்தார். அதை நம்புகிறவர்களும், இல்லாமலில்லை. அவருக்குச் சேதி எட்டி "ராம ராமா!! இப்படியொரு எழவா?" என்று ஓடிவந்தார். யாரும் அவரை பொருட்படுத்தவில்லை. கூடியிருந்த மக்கள் சபிக்க, கமலாவின் குடும்பம்கதற சித்தப்பா சிவலிங்கம் துடிக்க திருமிகு ஜானகி, போலீஸ் லாரியில் ஏற்றப்பட்டான்! இந்த வேதனையைக்கண்ட கூட்டத்திலிருந்த பண்டிட் பரமு, நைசாக நழுவினுர்—இதற்கு இரண்டு நாட்களுக்கெல்லாம், பாரத பால கான சபா, திடீரென்று தங்கள் 'வந்தனேபசார, நாடகத்தைப் போட்டு விட்டு நடையைக் கட்டி விட்டார்கள். அந்த ஊரை விட்டுப் போனதும் நாடக சபையேகூடக் கலைந்து விட்டதாகக் கேள்வி!! லாரியில் ஏற்றப்பட்ட ஜானகியோ வெற்றி வீரனைப் போலச் சென்ருன் கூடி நின்றேரில் முன்பு அடிகொடுக்க அமர்த்தி அதன் காரணமாகச் சிறைக்குப் போனச் சிங்காரமும் நின்ருன்.

"பயலே! காசுகொடுத்து என்னை ஜெயில்லே தள்ளின உன்னை இந்தச் சமயம் சரியாகக் கவனிச்சுடறேன். இப்பவேபோயி போலீஸ் ஸ்டேஷன்லே' அவனை வெட்டினதைப் பார்த்தேன்னு நானே சாட்சியம் சொல்றேன்!" என்று கருவிக் கொண்டான். அவன் சிறைக்குப் போனதால், கவனிப்பாரற்று அவன் ஆசையோடு வளர்த்த சிங்கம் செத்துப் போய்விட்டது! சிங்கம், நல்ல நாய்!! அதற்குப் பழிவாங்க எதுவும் செய்வது என்கிற வெறியுடன் அலைந்த அந்த வஸ்தாது, இந்தச் சமயத்தில் தன்னுலான கெடுதலை"ச் செய்ய முடிவு செய்தான். இத்தகைய "நல்ல சூழ்நிலை"யோடு காதல்நாயகம்-வீரர்—விவேகி—ஜானகிராமன் அவர்கள், சிறைக்குள்ளே கொண்டு பூட்டப்பட்டார்!

"சார்! பழைய சிநேகத்தை வைச்சு இரண்டுபேரையும் பார்த்துட்டு வரலாம்னு போனப்ப, இவர் கமலாவை வெட்டினதைக் கண்ணுரக் கண்டேனுங்க..." என்கிற சிலம்புவீரர் சிங்காரம் (சிலம்பாட்டத்தில் எங்கள் ஊரில் பெயர்போனவன்வஸ்தாதுசிங்காரம்!) சாட்சியமும், இருந்தது என்ருலும் பிரேதம் கிடைத்தால் இன்னும் நல்லதல்லவா! அதனுல், ஆறு சங்கமமாகும் கடல்வரையில் அலசித் தேடினுர்கள் போலீசார்!! அவர்கள் அப்படித் தேடிக் கொண்டிருந்த நேரத்தில், கோட்டும் சூட்டும் கூலிங்கிளாசும் பெட்டியும் பணப்பையொன்று

(8-ம் பக்கம் பார்க்க)



# நமது பாசறை

நாஞ்சில்
**மனோகரன்**

வெடிச்சத்தம் இடிச்சத்தம் வெண்கலச் சத்தம்தொண்டை
அடிச்சத்தம் பொடிச்சத்தம் அனைத்தையும் காட்டிநல்ல
வில்மீது மின்னல்மீது வேல்விழி மடந்தையர்தம்
பொல்லாத புருவமீது புகழ்தேக்கி நிற்கும்சிற்பக்
கல்மீது ஆற்றின்மீது காண்கின்ற நெளிவையெல்லாம்
சொல்மீது காட்டிப்பேசும் சொற்பொழிவாளர் !—பேச்சில்

ஒருமணி நேரத் திற்குள்
உலகெலாம் சுற்றி வந்து
அருகரு கிருந்து காட்சி
அனைத்தையும் கண்ட வர்போல்
மெருகூட்டி சுவையைக் கூட்டி

மிகஒளி தாக்கிக் காட்டி
வருகின்ற வீரர் ! நாட்டை
வாழ்விக்க வந்த தொண்டர் !

பணநாய கம்நடத்தும் பாதகர் ஆட்சிதன்னில்
சனநாய கம்என்னும் சரியான தனித்தலைப்பில்
பேசிடும் படித்தமேதை! பிரிவினைக் கருத்து தேக்கி
வீசிடும் முழக்கம்கேட்டு விழிக்கின்றார் எதிர்க்கும் வீணர்!

உருவக நடையில் மன்னன்!
உள்ளத்தில் சுழன்றுகொஞ்சி
வருகின்ற கவிதைதன்னை வளர்ப்பவர்!

ஆசிரியர் முன்னணிக்கு! அறிவுத் துறைபயிற்றும்
ஆசிரியர் இளைஞருக்கு! அரசியலில் திட்டாமல்—தீய
எண்ணத்தை மறுத்து ஏற்றதனை எடுத்துரைத்துக்
கண்ணியமாய்ப் பேசுவதில் கைதேர்ந்த தீரர் இவர்!

நினைத்திடும் போதெல்லாம்
நெஞ்சு மகிழும்
இனிப்போடு பேசும்
இயல்புள்ள அண்ணன்
இளைஞரில் அறிஞர்
கேரளத் தென்றல்
இ மனோகரன்.

புலவர் 'பொன்னிவளவன்'

* * *

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

துக் கேட்கிறார் சம்பத்!

இதைச் சம்பத் தெரிந்து சொல்கிறாரா? தெரியாமற் சொல்லுகிறாரா? இரண்டில் எதுவானாலுமே மோசம்தான்.

ஏனெனில் சட்டமேதையான டாக்டர், இந்தியாவுக்கு அரசியல் நிர்ணயச் சட்டத்தை உண்டாக்கியது. காங்கிரசுக்காகவேயன்றி அவர் சொந்த நோக்கத்துக்கு அல்ல. அவருடைய சட்ட நிபுணத்வத்தை காங்கிரசுக்காரர்கள் வாடகைக்கு-வாங்கினார்கள் அவர் காங்கிரசுக்காரரே அல்ல. அவரைச் சட்ட மந்திரியாக்கிய போது காங்கிரஸ் தலைவர்கள், பெயருக்காவது கால் ரூபாய்ச் சந்தாக்கட்டி உறுப்பினராகி, காங்கிரஸ் சர்க்காரை கௌரவியுங்கள், காங்கிரஸ்உறுப்பினராக மாற அவர் கடைசிவரை சம்மதிக்கவே இல்லை. காங்கிரஸ் அல்லாத சட்ட மந்திரியாகவேகடைசி வரை இருந்தார். அரசியல் நிர்ணயச் சட்டத்தை காங்கிரசிடம் வாங்கிய பீசுக்காகவே செய்தார்.

தி. மு. க. வுக்கு திராவிடநாடு கொள்கை வகுத்த சம்பத் தி. மு. க,வுக்கு வாடகைக்குப்போனவரா? தி. மு. க. உறுப்பினர்மட்டுமல்ல அவர்—தி. மு.க.வை உண்டாக்கிய மிகச்சிலரில் ஒருவர் சம்பத். அதன் தலைவராகவே இருந்தார். தமது நோக்கமே தி. மு. க. வின் நோக்கம்தான் என்ற அந்தஸ்தில் கொள்கை வகுத்தவர்.

பீசுக்காக சட்டம் செய்த டாக்டர் அம்பேத்காரோடு தன்னை ஒப்பிட்டுக் கொள்ள சம்பத் வெட்கப்படவே இல்லை என்கிறபோது எங்கே வேதனைப்படப் போகிறார்.

ஒருக்கால், நானும் விஷயம் தெரிந்தேதான், வாடகைக்காக! செல்வாக்கைத் திரட்டிக்கொள்வதற்காக! கபடமாக தி. மு. க. தலைவனாக நடித்தேன் என்று சொல்வாரானால் திரு. சம்பத்தே தான் சம்பத்தின் முதல் எதிரி.

சம்பத்தே சம்பத்துக்கு எதிரி என்றால், அந்த சம்பத்துக்கு நண்பர்கள் ஏது? நண்பர்கள் இல்லாத நபருக்கு தேசியத்தின் பெயரால் ஒரு கட்சி ஏன்?

—0—

---

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கையிலுமாக சென்னை சென்டிரல் நிலையத்தில் கையில் ஒரு "பம்பாய்க்குப் போகும் டிக்கட்டுடன்" தன்னை யாராவது ஒரு அழகி கவனிக்கிறாளா, என்று நோட்டம் பார்த்தபடி நின்று கொண்டிருந்தான் கற்பனைக் கமலா!! ஒரு பெண் அவனைப் பார்த்தாள். முதலில் அவன் அதைப் பெரிதாக எண்ணவில்லை அவள் எதிரே, கிளம்பத் தயாராயிருந்த ரயிலில் உட்கார்ந்திருந்தாள்இவனை மீண்டும்அவள்பார்த்தாள். தலையில் 'ஐஸ்' வைத்தது போலிருந்தது அவனுக்கு! மறுபடியும், பார்த்தாள். மயக்கம் வரும் போலிருந்தது அவனுக்கு! அழகான நாகரீக மங்கை அவள். தன்னை ஒரு தடவை கமலா, பார்த்துக் கொண்டான். மீண்டும் அவள் பார்த்தாள். அவன் கற்பனை மூளை, வேக வேகமாகவேலை செய்தது. அவள் அமர்ந்திருந்த ரயில் புறப்பட 'கார்டு' விசிலடித்து விட்டார்! அவள் மறுபடியும் பார்த்தாள். பம்பாஸ் எக்ஸ்பிரசில் கிடந்த தன் 'சூட்கேசை: எடுத்துக்கொண்டு, விரு விருவென்று தாண்டி, புறப்பட்டுக் கொண்டிருந்த அவளமர்ந்திருந்த வண்டிக்குள், பிரயாணிகளை முண்டியடித்துக் கொண்டு, ஏறினான் கமலா!! ஓட ஆரம்பித்த அந்த ரயிலின் பெட்டியில், "கல்கத்தா மெயில்" என்று போட்டிருந்தது!!

(தொடரும்

# எதுவன் செயல் !

(வேங்கடேசன்)

வன்செயலென் றோயாமல் அறிக்கை விட்டு
வளர்ந்திடலாம் என்றுகனக் காணும் வீரா !
அன்னையினும் அருளுடைய அண்ணா தம்மை
அவமதித்துப் பேசியதும் கழகச் சட்டம்
தன்னையுடைத் தெறிந்ததுவும் பெரும்பா லோர்கள்
தருங்கருத்தைத் தள்ளியதும் கட்டில் லாமல்
உன்மனம்போல் பேசியதும் போன்றே இந்த
உலகத்தில் வன்செயலொன் றுண்டோ சொல்லாய் !

அரசியல்நல் வாழ்க்கையிலே தாலி தன்னை
அறுத்துவிட்ட காங்கிரசார் புகழ்ச்சி வேண்டி
முரசடிக்க முனைந்துள்ள முதல்வா நீதான்
முன்னுக்குப் பின்முரணாய்ப் பேசல் கேட்டுக்
கரங்கொட்டி நல்லவர்கள் சிரிக்கின் றார்கள்
கருத்தற்றோர் அதுகேட்டு மகிழ்கின் றார்கள் !
தரங்கெட்ட முறையினிலே தாயைத் திட்டின்
தனையரெலாம் வாளாவே இருக்க மாட்டார்.

* * *

(நெல்லிக்குப்பம் வரகால்பட்டு பெர். வெங்கடேசனின் கவிதைகள் எளிய நடையில், மண்டையிலடித்தாற்போல் சொல்லடுக்கும் திறனோடு விளங்குகின்றன. இவர் ஒரு புலவர்.

# பாவி மன்னிப்பு

—தோழன்—

3

எங்களை எதிர்நோக்கிக் கூடுகிற கூட்டம் எங்களை மெய்சிலிர்க்க வைக்கிறது — ஏனென்றால், எங்களுக்குள்ள பொறுப்புக்களை— செய்ய வேண்டிய சேவைகளை —தியாகத்தை நினைவுறுத்துகிறது.

இந்த நினைவு எங்களைச் சேர்ந்தவர் பிரிந்தாலும் எங்களைத் திக்குமுக்காடச் செய்து விடுகிறது.

எங்கள் கண்ணீர், மதிப்பீட்டில் எவ்வாறு மதிக்கப் பெறுகிறது என்பதைப்பற்றி நாங்கள் கவலை படவில்லை.

கண்ணீரைக் கேலி பேசும் கனவான்களே! எத்தனை நாட்களாக சிரிப்புக்கும் கும்மாளத்திற்கும் மட்டுமே மதிப்பளிக்கத் தெரிந்து கொண்டீர்கள்?

சிரிப்பதற்கு எங்களுக்குத்தெரியாதென்பது அல்ல—எங்களால் சிரிக்க முடியவில்லை.

சிரிப்பு! நாங்கள் எதிர்பார்த்து ஏங்கும் பல சிறப்புக்களில் ஒன்று!

கண்ணீர்! எங்களைக் சூழ்ந்துச் சுவராக எழும்பிநிற்கும் பொருள்!

நாங்கள் பிறந்தது—கண்ணீரில்! வளர்ந்ததும் அதனால்! கொடுமைகளைக் கண்டு குமுறும் நெஞ்சிரக்கம் உள்ள வரையில், அடிமை நிலை ஒழிக்கிற வரையில் எங்களுடன் பிறந்தோரே ஏமாற்று—வஞ்சகங்களில் ஈடுபட்டுப் பழி சுமத்தும் வரை,

எங்கள் கண்ணீர் வற்ருது!

எப்போதும் அழுதுகொண்டே இருந்தவன், என்ருவது ஓர் நாளில் சிரித்திருக்கிருன்.

சிரித்துக்கொண்டே இருந்தவனைச் சராசரி மனிதனுகச் சரித்திரம் ஏற்றுக் கொண்டதில்லை.

உங்கள் தாய் தந்தை—மனைவி மக்கள்—உற்ருர் உறவினர் இடையிலேயே நாள்தோறும் நடிக்கப் பழகி வரும் நீங்கள் அம்பலத்தில் நடிப்பதை அவ்வளவாக விரும்பமாட்டீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும்!

அழுக்கைச் சேர்த்து உருண்டையாக்கி அறையில் மட்டுமே பந்தாடி மகிழ்கிறீர்கள்!

ஒழுக்கத்தை உபதேசிக்க அம்பலத்தை—வற்றிப்போன நீர்த்தரையை—பிணங்களைப் புதைத்த கல்லறைத் திடலை—நாடித் தேடி ஓடுகிறீர்கள்!

ஒழுக்க போதனை உங்கள் மொத்த வியாபாரக் கடையின் மலிவான சரக்காகிவிட்டிருக்கிறது. ஒழுங்கீனமும் பாபகரமான செயல்களும் உங்கள் இரத்தத்தில் ஊறிப்போய் விட்டிருக்கின்றன!

நடிப்பே உங்கள் மூலதனம்.

துரோக சிந்தையே உங்கள் வழிபாட்டுத் தெய்வம்.

மனித நரம்பு மண்டலத்தின் கணநேர எழுச்சியைப் பயன்படுத்திக் காசாக்குவதே உங்கள் குறிக்கோள்!

உள்ளத்தைத் தொட உங்களுக்கு என்றைக்குமே தெரியவராது!

இந்தகு ‘சிறப்பியல்புகள்’ கொண்ட நீங்கள்தான் இந்த சமுதாயத்தின் அடிமைச் சங்கிலியை அறுபட வைக்கப்போகிறீர்களா?

ஒரு தலைமுறை காலத்திற்குள் உங்களுக்கு வெற்றி கிடைத்து விடுவதாகச் சொல்வதால் அதனை நாங்கள் பார்க்காமல் கண்மூட மாட்டோம்!

இருள் சூழ்ந்ததும் புதர் மறைவிலிருந்து வேட்டைக்குக் கிளம்பும் ஓநாய்களைப்போல, நீங்கள் ஒவ்வொருவரும் இருட்டில் திரிந்து வேண்டிய நச்சுக் காற்றை வெளியில் பரப்பிப் பின், வெளிச்சம் பிறந்ததும் வீடு வந்து சேருகிறீர்கள்.

இருட்டில் வெகு நன்ருக உங்கள் பார்வை தெரிகிறது.

கள்ளப் பூனைகளுக்கும் உங்கள் கண்களின் திறமை வராது.

உழைத்துச் சாப்பிட்டப் பெருமை உங்களில் யாருக்கும் இருக்கிறதா?

வியர்வை வடிய, எலும்பு முறிய உங்களில் எத்தனைபேர் வேலை செய்திருக்கிறீர்கள்.

வெயிலில் எத்தனை நாள் நடந்திருக்கிறீர்கள்.

மழையில் எத்தனை முறை நனைந்திருக்கிறீர்கள்.

பொருள் சேர்க்கப், புகழ்ச் சேர்க்கப் பாட்டுகள் போட்டதைத் தவிர...

மெத்தப் படித்தவராகக் காட்டிக் கொள்ள அரசியல் மன்ற நடவடிக்கைப் புத்தகங்களை அழகழகாக அடுக்கி வைத்திருப்பதைத் தவிர...

எத்தனைப் போர்க்களங்களைப் பார்த்தாவது இருக்கிறீர்கள்?

எத்தனைப் போராட்டங்களில் ஏமாற்ருது கலந்துகொண்டிருக்கிறீர்கள்?

சிறுவர்களே!

களிமண் பிசைந்து கட்டியிருக்கும் உங்கள் கோட்டையைப் பகைமையும், வெறுப்புமான பண்டங்களால் நிரப்பாதீர்கள்!

நல்ல பண்டங்களைப் போட்டு நிரப்புங்கள்!

வாழும் மனிதர்களை வசைபாடுவது போதாதென்று இறந்து போன பெருமக்களையும் இழுத்துப்போட்டு ஏக வசனத்தில் திட்டித் தீர்க்காதீர்கள்.

எலும்புக் கூடுகளை எடுத்து வைத்து ஆராயும் கலை அனுபவசாலிகள் மட்டுமே சரிவரச் செய்யக்கூடியதாகும்.

உங்களுக்கு அது வேண்டாம்!

‘தேவன்’ மூச்சு விடாமல் பேசிக்கொண்டே போனுன். இடையில் பரபரப்புத் தெரிந்தது.

சாம்பல் நிறச் சால்வையை தலை தெரியாமல் போர்த்திய ஒருவன் ஓடிவந்தான். வாத்துத் தாவுவதுபோல் இருந்தது அவன் ஓட்டம்.

சதி—சதி, என் வயிற்றில் அடித்துவிட்டார்கள். என்னையே தாக்கத் துணிந்துவிட்டார்கள்! மூலவிக்கிரகங்களே மதிப்பற்றுப் போகும் பொல்லாத வேளைவந்திருக்கிறது.

‘தேவன்’ முகத்தைக் கடுப்பாக்கிக்கொண்டு அவனைப்பார்த்தான்.

‘எதையும் தாங்குவோம். இதனுலெல்லாம் பின்வாங்க மாட்டோம்.’ சரிகை வேட்டிக்காரன் நெடுநேரத்திற்குப் பிறகு பேசினுன்.

‘கூடாது. பின்வாங்கவே கூடாது. இனி அப்படிச் செய்யும் கயவனைப் பிடிப்பதில் யாரும் பின்வாங்கக்கூடாது.

இனி எவனுவது உன் தலையில் அடித்தாலும் சரி, வயிற்றில் அடித்தாலும் சரி—எதனுல் அடித்தாலும் சரி—எல்லோரும் சேர்ந்து அவனைப் பிடித்து விசாரிக்கவேண்டும்.

சாக்கடைத்தனமான அரசியலுக்குச் சாமரம் வீச நினைப்போர், இந்த நாட்டவருக்கே பொதுவான எதிரி.

சுற்றியிருந்தோர் முகத்தில் ஈயாடவில்லை. தேவனின் கோபக் குறியைக் கண்டதும், கூடியிருந்த கூடடம் மெல்லக் கலைந்தது.

‘தேர்தலுக்குப் பிறகு உன்னைச் சந்திக்கிறேன்’ எனச் சொல்லி சரிகை வேட்டிக்காரன் புறப்பட்டு விட்டான்.

சாம்பல் நிறப்போர்வைக்காரனும் அவனைப் பின்தொடர்ந்தான்.

வேறு வேலை கவனிப்பதற்காக தேவன் தெருவோடு வேகமாக நடந்தான்.

—0—

## காலம்வெகு தூரமில்லை!

(நாஞ்சில்—தமிழ்த்தாசன்)

“மாய்ந்தாலுந் தி. மு. க. கொடியின் கீழ்தான்
மாய்வேன்நான்” என்றுரைத்த சொல்லை சம்பத்
ஆய்ந்தேதான் பாராமல் அச்சொல் மாறி
அருத்தமிலாப் புதுக்கட்சி ஒன்ற மைத்துப்
பாய்ந்தாலும் தி. மு. க. வளரும், வாழும்;
பலனென்ன புதுக்கட்சி தளரும், வீழும்,
காய்ந்துவிட்ட சருகாகிப் போகும். இதற்குக்
காலம்வெகு தூரமிலைக் காண்பீர் நீவீர்!

பொருளில்லாப் புதுக்கட்சி அமைத்த அவரும்
புத்துறவை எங்கேதான் கொண்டு விட்டார்?
அருளில்லாக் காங்கிரசும் ம. பொ. சியும்
ஆதித்த னர்கட்சி நாம்த மிழரும்
இருள்மூடி விட்டதிரா விடர்க ழகமும்
இவையெல்லாம் உறவென்ருல் அந்தக் கட்சி
கருகிவிடக் காலம்வெகு தூரம் இல்லை.
கண்டிடுவீர் வெகுவிரைவில் எமதிச் சொல்லை!

*...*...*

(தமிழ்த்தாசன் எனும் புனைப்பெயரிலுள்ள தோழர் செ. ப. ஜமால்முகமது, காலஞ்சென்ற சதாவதானி கா. ப. செய்குதம்பிப் பாவலர் அவர்களின் பேரன். கழகத்தில் பற்றுள்ள இளைஞர்,)

—ஆசிரியர்

# தமிழரும் ஆந்திரரும்

## 7

திருவாரூர் கோயிலில், திருவிழாவை ஒழுங்காக நடத்தாமலே அங்குள்ள பட்டர்கள் சிலர் கொடியிறக்கப் புக, அதனைக் கண்டு மனஞ்சகியாமல் சைவத் துறவியும் புலவருமாகிய தத்துவப்பிரகாசர் என்பார்—

"மருவுபுகழ்க் கிருட்டிண மகரா
—சராணை
அரிய வடகலையா ராணை—
திருவாரூர்ப்
பாகற் கொடியறுப்பார் பாதந்
—திருவாணை
த்யாகக் கொடியிறக்கா தே"

என்று கொடியிறக்கவொட்டாமல் ஆணை கூறித் தகைந்துவிட்டு, அப்பட்டர்களுடைய அதிக்கிரமச் செய்கையை,

'ஊழித் துலுக்கல்ல வொட்டி--
யான் ருனுமல்ல
விழித் துலுக்கு வந்து—
மேலிட்டே—யாழி
சிறந்ததிரு வாரூர்த் தியாகரு—
டைப் பூசை
இறந்ததே கிட்டிணரா யா'

என்று கிருஷ்ணதேவ ராயர்க்கு எழுதி விடுத்தனர் என்றும், உடனே இராயர் அக்கோயிற் பட்டர்களை மாற்றிவிடக் கட்டளையிட்டனரென்றும், அப்போது அவர்களை நோக்கித் தத்துவப்பிரகாசர்—

'உண்டவயிற்றி லுமிக்காந்த
--விட்டதே
தொண்டரே விழித் துலுக்கரே
—பண்டெல்லாம்
அப்ப மவலென் றதிரசமுந்
—தோசைகளும்
கப்புவது போச்சே கவிழ்ந்து'

என்று இகழ்ந்து கூறினரென்றும் தமிழ் நாவலர் சரிதையால் அறியப்படுகின்றன. இவ்வாறே மற்றொருகால், அக்கோயிலிலிருந்த அறுபத்துமூவர் விக்கிரகங்களிலே இரண்டை, அருச்சகரோ அதிகாரியோ ஆகிய நாகரசநம்பி என்பவர் வெட்டி யுருக்கிடதை அறிந்த அத்தலத்தார், அச்செய்தியைக் கிளிக்குப் பாடப்பழக்கி அதனை கிருஷ்ணதேவராயர் திருமுன்பு சொல்லும்படி செய்தனர் என்று தெரியவருகின்றது. அப்பாடலாவது,—

'முன்று ளறுபத்து மூவரிருந்
—தாரவரில்
இந்நா ளிரண்டுபே ரேகினர்
—கன்னன்
நருக்குகின்ருன் விற்றுவிட்ட
—நாகரசு நம்பி
இருக்கின்ருன் கிட்டிணரா யா'

என்பது.

இனி, சைவ வைணவ வாதங்களைப்பற்றிப் பாடப்பட்ட இரு சமய விளக்கம் என்ற அரிய நூலை இயற்றிய அரிதாசர் என்ற புலவர் இக்கிருஷ்ணதேவர் காலத்தவரென்பதும், அவராற் பெரிதும் அபிமானிக்கப்பட்டவ ரென்பதும் அறியத் தக்கன. மேற்குறிப்பிட்ட நூலின் பாயிரத்துள்,

'சிரிபோல் விளங்கிக் கிளரும்
—புயக் கிருட்டிணராயர்
தரைமீது சிங்காத் திரியிற்—
—சயத் தம்ப நாட்ட
வரமா தரவா லளித்தேவட—
கூவ மேவும்
கருமா மணிவண் ணனைநீடு'
கருத்துள் வைப்பாம்-

என்றுள்ள பாடலினின்று மேற்கூறிய செய்திகளை அறியலாம். கிருஷ்ணதேவராயர் சிம்மாசலமென்ற திருமால் திருப்பதியில் ஜயஸ்தம்பமொன்று நாட்டினர் என்ற விஷயம் இப்பாட்டிற் கூறப்படுகின்றது. அவ்வரசர் நாட்டிய ஸ்தம்பம், மேற்கூறிய கலிங்க அரசனை பிராதாபருத்திரனுடன் உத்தேசம் 1515'ல் அவர் நடத்திய போரின் வெற்றிக் குறியேயாகும். அவ்வரசரே பாடிய ஆமுக்தமால்யதா (காண் 4, 290) விலும், அவரது ஆஸ்தான கவியாகிய அல்லசானி பெத்தன்ன பாடிய மனுசரிதத்திலும் (காண் 1, பத், 36, 38) சாஸனத்தும் (இ. பி. ரிப் 74 ஆவ் 1903) மேற்படி ஜயஸ்தம்பத்தைப் பற்றிப் பேசப்பட்டுள்ளன என்பர். சிம்மாத்திரியில் மேற்படி தம்பம் நாட்டப்பட்டதாக அருசமய விளக்கமுடையார் கூறினும் சிம்மாசலத்தின் அடிவாரத்தில் சிம்மாத்திரிப் பொட்டுநூர் என்று இப்போதும் வழங்கும் ஊரே. அத்தம்பம் நாட்டப்பட்ட இடம் என்று தெரிகின்றது.

சிம்மாத்திரித் திருமாலிடம் கிருஷ்ணதேவர் பெரும் பக்தி கொண்டிருந்தவர் என்பது, சக ஆ1438—1441-ல் அவ்வரசர் அநேக ஊர்களும் திருவாபரணங்களும், அத்திருமாலுக் களித்தனரென்று சிம்மாசலக் கோயிலிற் காணப்படும் சாஸனங்களால் விளங்குகின்றது. இத்தகைய கிருஷ்ணதேவராயரது, வெற்றித் திறத்தைப் பாடிய அரிதாசர் அவ்வரசர்பெருமானால், பெரிதுங் கௌரவிக்கப் பெற்றவரென்பதும் இவர் நூலால் மட்டுமின்றிக் கல்லெழுத்துக்களாலும் தெளிவாயறியப்படுகின்றன.

இவற்றால், கோயில் முதலிய தர்ம ஸ்தாபனங்களின் குறைபாடுகளை, அவ்வப்போது கேட்டுத் தீர்த்து மன்னுயிரைத் தன்னுயிரைப்போற் பாதுகாத்து வந்ததோடு, தமிழபிமானமும் உடையாராயிருந்தனர் இவ்வரசர்பெருமான் என்பது பெறப்படும்.

பெரும் கல்விமானாகவும், சிறந்த கவியாகவும் விளங்கித் தமிழ் நாட்டின் பெரும்பாகத்தை ஆட்சி புரிந்துவந்த பேரரசராகிய இவர்க்குத் தமிழ்ப்பாஷையில் அறிவும் ஆதரவும் இருந்தன என்பது ஓர் ஆச்சரியமன்று. இவ்வரசர் இயற்றிய கிரந்தமாகப் பலரும் பெருமைப்பாராட்டிவருவது ஆமுக்தமால்யதா என்ற ஆந்திர நூலாம், சூடிக் கொடுத்தாள் என்பதே, ஆமுக்தமால்யதா' என்பதன் பொருள். ஆண்டாள் வைபவத்தைப்பற்றி இவர் பாடியுள்ள சொற்செறிவு பொருணயங்களைப்பற்றி, ஆந்திர அறிஞர்கள் புகழ்ந்து பாராட்டுவதைப் பலமுறை நான் கேட்டிருக்கிறேன். இவ்வரசர் அரசியன் குறையாற் பொதுநோக்கமுடையராயினும், சமயக் கொள்கையில் தென்னாட்டு வைஷ்ணவ ஸம்பிரதாயத்தைத் தழுவியவர். இவர்க்கு ஆசாரியர் இன்னரென்பதற்குத் தெளிவான ஆதார

**மு. இராகவையங்கார்**

மில்லையென்றும், அதனால், இவர் பின்னோர் காஞ்சீபுரம் சீதாத தேசிகன் திருவடி ஸம்பந்திகளென்பதற்குப் பிரமாணங்கள் உண்டென்றுங் கூறுவர். இவருடைய கிரந்தத்தில், ஆண்டாள் பாசுரங்களின் அருமை பெருமைகளும், தமிழ் நாட்டின் சிறப்புக்களும், நம்மாழ்வார் ஆளவந்தார் உடையவர் வேதாந்த தேசிக மணவாளமாமுனிகள் அஹோபிலம்ஜீயர் என்ற சீவைஷ்ணவ பரமாசார்யர்களின் அவதார மகிமைகளும் அழகாக் கூறப்பட்டுள்ளன என்பது தெரிகின்றது. இதனால், மதரீதியாலும் திராவிட பாஷையை இவ்வரசர்பெருமான் கௌரவித்து வந்தவர் என்பது விசதமாகும்.

அன்றியும், தென்னாட்டரசியன் முறைக்கென்று, தமிழமைச்சர் சிலரையும் இவ்வரசர் உடையராயிருந்தனர். அவ்வமைச்சருள், அம்பி அறம்வளர்த்த முதலியார் என்பாரும், வடமலையார் என்பாரும் சிறந்தவர்கள். இவர்களுள், முற்கூறிய முதலியார் தொண்டநாட்டுச் செம்பூரினர். இவர், கிருஷ்ணதேவராட்சிக்கு முன்பும், விஜயநகர ஏகாதிபத்தியத்தில் தலைமை வகித்தவர். இவ்வமைச்சரின் அபிமானத்தைத் தமிழரசர்களும் அக்காலத்து எதிர்பார்த்தவரா யிருந்தனர். பாண்டியனொருவன், இவர் மேற் கலம்பகமொன்று பாடிப் புகழ்ந்தனனாக, 'அவ்வாறு பாடியது தகுமா?' என்பதுபற்றி உசாவிய புலவர் ஒருவர்க்கு விடையாக, அவ்வரசன் பாடிய செய்யுளொன்று அடியில்வருமாறு தமிழ்நாவலர் சரிதையிற் காணப்படுகின்றது.

**"அறம் வளர்த்த முதலியாரைப் பாண்டியன் கலம்பகம் பாடலாமோ?" என்ற புலவர்க்குக் கூறியது:—**

"உங்கண் மனந்தெரி யும்புல
—வீரொரு சீர்மரபோந்
திங்கண் மரபினந் திங்களின்
—கூடச்செம் பூரறமா
துங்கண் மரபினிற் கங்கையுஞ்
—சூடினன் பசாதியன்றே
எங்கண் மரபுண் டெனக்கவி
— பாடினம் யாமவற்கே"

"சிவபிரான், திங்களுடன் கங்கையுஞ் சடையிற்றறித்துள்ளமையால், திங்கள் மரபினராகிய எமக்கும் கங்கை மரபினராகிய முதலியார்க்கும் உறவுண்மைப் பற்றி, யாம் அவரைப் பாடாலாயினேம்" என்பது இப்பாடற் கருத்தாதல் காண்க. செம்பூர் அறமாதுங்கன்...செம்பூர் அறம் வளர்த்த முதலியார்; செம்பூர் இவரதுரிமையூரும், அம்பி இவர் உத்தியோகம் வகித்த நகருமாகக் கொள்ளத்தக்கன. ஒருகால், கிருஷ்ணதேவராயர் திருமுன்பு வேளாள மகளிரைப்போல வேஷம் பூண்டு ஆடிய கூத்தர் சிலரைக் கண்டு இம்முதலியார் பொறுமல் தங்குலத்துக்கு அவமானமாக நடித்த அவர்களை வாளால் வெட்டி மடிவித்தார்.

(—தொடரும்)

---

[4-ம் பக்கத் தொடர்ச்சி

போர்வதற்குள் அநேகமாக வேலை முடிந்திருந்தது. தோலால் செய்த மேலணியை நான்போர்த்தியிருந்தேன். இருந்தும் குளிர் தாங்க முடியவில்லை. நான் போனபோது யூதர்களுடைய கடைசி வரிசை தங்களது ஆடைகளை அவிழ்த்துவிட்டு, வந்துகொண்டிருந்தது நேரே வந்தவர்கள், ஒருவர் பின் ஒருவராக வரிசையாக, ஒரு குழியில் குதித்தார்கள். அப்படிக் குதித்தக் காட்சி, ரம்மியமாகயிருந்தது. ஒருவர்கூட எதிர்க்கவில்லை. உடனே ஜெர்மானிய வீரர்கள் அந்தக்குழியை நோக்கி மிஷின் துப்பாக்கிகளுடன் ஓடினர். இந்தக் குழியில் குழந்தைகளும் இருந்தார்கள். எனக்கென்னமோ, அந்தக் குழந்தைகளைப் பார்த்தபோது என்னுடைய குழந்தைகளின் கவனம் வந்தது. ஒரு வயது அல்லது இரண்டு வயதுள்ள சிறுசிசுவை, ஆகாயத்தை நோக்கிப் பிடித்துக்கொண்டு, ஒரு தாய் அலறினாள். "என்னைக் கொல்லுங்கள். இந்தக் குழந்தையை உயிரோடு விடுங்கள்", என்று. எனக்குப் பரிதாபமாயிருந்தது. ஆனால், அதற்குள் வேட்டுக் கிளம்பியது. நான் மிகமிக அருகாமையில் நின்றேன். என்னுடைய மேலங்கியில் குழந்தையின் மூளைகள் சிதறியபோது விழுந்த சிறுசிறு சிதறல்கள் கிடந்தன! என் டிரைவர், எடுத்தெறிந்தான். உடனே நான் பெர்லின் திரும்பினேன்...

[தொடரும்]

(2-ம்பக்கத் தொடர்ச்சி)

தப்பிள்ளைக்குத்தான் ஆசை வராது !! வீரா...இச் சந்திப்பு, மிகவும் சாதாரணமானது, சரா சரியா நடக்கக் கூடியது. ஆனால், இதையும் சம்பத்து, ஒரு பெரிய விஷயமாக மக்களுக்கு உருவாக்க நினைத்தாரே, அதிலதான் அவருடைய "அரசியல் தந்திர மூளை"யிருக்கிறது...... ஏதோ ஒரு பெரிய விஷயம் என்று ஒரு நாளைக்கு எல்லாப் பத்திரிகைகளும் போடுமல்லவா உன்னைப்போல், 'தினத்தந்தி' மாடலை விரும்பும் மனம் கொண்டோர், 'தெரியுமாய்யா! இன்னைக்குப் பெரியாரும் சம்பத்தும் சந்திச்சிட்டாங்களாம்! என்று பேசுவார்களல்லவா ?...ஒரு நாள் பரபரப்பு இருவருக்கும் ! அது, அவர் ஆசை...அதில் உனக்கும் நாட்டுக்கும் என்ன நன்மை இருக்கிறது?", என்றேன்.

வீரன், ஒருவிஷயம், சரியென்று மனதில் பட்டால், உடனே, ஒத்துக் கொள்வான். இதிலும் அவனுக்குத் தோழர் கண்ணதாசனின் சுபாவம்தான். ஒருகருத்தை எவ்வளவு அழுத்தமாக வலியுறுத்துகிறானே, உடனே அக் கருத்தை, அப்படியே மறந்து விடுவான். எதுவும், நிரந்தரமாக அவன் மனதில் நிலைக்காது. எதையும் ஆலோசிக்க மாட்டானே ஒழிய, மிக மிக நல்லவன் என் மீது மிகவும் அன்பு கொண்டவன்.

"அப்போ ! இதுவும் நீ சொல்றபடி பார்த்தால், சம்பத், செய்கிற 'ஸ்டண்டு'களில் ஒன்று...ஆமாம் ஆசிரியரே ! 'இப்போதுதான் பெரியாரிடம், அண்ணாதுரையைப் பற்றிப் பேசி விட்டுவருகிறேன்' என்று சென்னைக் கூட்டத்தில் சம்பத் வெளியிட்டது, உமக்குத் தெரியுமா ?", என்றான்.

"வேறு எதைப் பற்றியடா இவர் போய் அய்யாவிடம் பேசுவார்! சின்னய்யா—சின்னய்யா, இந்த அண்ணாதுரை...என்பார், சம்பத்...ஆமாம்! நாம் ஒருவன்தான் வயதிலும் அரசியல் அனுபவத்திலும் மூத்தவன் என்பதால் அண்ணாதுரையின் பெயரைச் சொல்லிக் கூப்பிடுவோம், இப்போது இவனும் கூப்பிடுகிறானே என்று அய்யா கொஞ்சம் ஆச்சரியப்பட்டுப் போயிருப்பார்... உண்மையாகச் சொல்றேன், சின்னய்யா! நான் அந்தப் பசங்களோடு இருந்தேனே ஒழிய, நெருப்பின் மேலிருப்பதுபோலிருந்தேன், என்று ஆரம்பித்திருப்பார் இவர்...பயல் ! என்னை முட்டாள். பித்தன், அரசியல் கூத்தாடி, காசாசைப் பிடித்தவன் என்றெல்லாம் அங்கிருந்தபோது சொன்னான். இப்போது இப்படிச் சொல்கிறான். ஊம! என்ன காரணம்? என்று யோசித்தபடியே, அய்யா பெட்டிச்சாவி இடுப்பில் பத்திரமாக யிருக்கிறதா என்று தொட்டுப் பார்த்துக் கொண்டே. ஆமாண்டா ஆமாம்! அப்படித் தானிருந்திருப்பே. இதைத்தான் நான் நம்ம 'நரசிம்மன்'கிட்டே கூடச் சொன்னேன். அண்ணாதுரையைப் போய் இவன் ஏன் தலைவன்னு சொல்லணும். ஒரு தலைவனாக வேண்டிய தகுதி, குடும்பம், பெறுமானம் இவனுக்கில்லையா, எனக்குப் பிறகு இவன் இருக்கக்கூடாதா. பாரம்பரியம் போயிடாதான்னு பல தடவை சொல்லி நான் வருத்தப்பட்டேன். சம்பத்து! நீ வந்தது ரொம்ப நல்லது; அதைவிட நல்லது தனிக் கட்சின்னு ஆரம்பிச்சி தலைவனானது. அதிலும் நல்லது ஒவ்வொரு நாளா ஜனங்க மிரள்றப்போல என்னைப் போல கொள்கையை மாத்தறது நம்ப 'மாஸ்சை காலஜி' இருக்கே! எதைச் சொன்னாலும் அழுத்தந் திருத்தமா, நம்பறாப் போல சொன்னாப் போதும். சரியா; தப்பான்னு யோசிக்கக் கூடாது. எப்படியோ, நம்ப அரசியல்லே இருக்கோம்கிறதை தினசரி ஜனங்க பேசும்படியாப் பண்ணணும்...நான் அப்படித் தான் சின்னய்யா பண்றேன்!... இப்படித்தான், இரண்டு பேரும் பேசமுடியும். இதை விட்டு வேறென்ன பேசியிருப்பார்கள்?"

"ஆமாம் ஆசிரியரே! இப்படி அய்யாவைப் போய் பார்த்ததையும், பார்த்தபோது அண்ணாவைப்பற்றிப் பேசியதையும், பொதுக்கூட்டத்தில் எடுத்துச் சொன்னதோடுவிடாமல், வழக்கம்போல் பத்திரிகைக்காரர்களையும் கூப்பிட்டு, ஏன சம்பத், பெரிய விஷயமாக்க வேண்டும்...?"

"திராவிட கழகம் என்று ஆங்காங்கு ஒரு சிலர் இருக்கிறார்களல்லவா? அவர்கள் இருக்கின்ற ஊர்களில்தானே சம்பத்துக்கு மேடை, மாலை, கொடியெல்லாம் கட்டுகிறார்கள்! அவர்களைத் திருப்திப் படுத்தத்தான்... வேறெதற்கு..."

"ஓகோ! இப்போதுதான் விஷயம் புரிகிறது. ஆமாம்...சம்பத், திராவிட கழகத் தோழர்களைத் தன்வசமாக்குவதுபற்றி, குருசாமி அண்ணனும் மணியம்மாவும் என்ன எண்ணுவார்கள் என்று யூகிக்க முடிகிறதா..."

"இந்த சம்பத்தை நம்பி நாமிருந்த கட்சியைவிட்டு வந்தோம்! இவரென்னடா என்றால், பழைய மொந்தையே மொந்தை என்று போகிறாரே...இது என்னடா கூத்தாகி விட்டது. என்று சம்பத்தின் ஆபீசிலிருந்து "தௌசண்ட்லைட் கபே"க்குச் சாப்பிடப் போகும்போதும் வரும் போதும், சிலர் பேசிக் கொள்வது மட்டும் எனக்குத் தெரியும்! வீரா— என்னை தொல்லைச் செய்யாதே. வீடு, ஈரோட்டார், பேச்சை. எடு, ஓட்டம் இங்கிருந்து...", என்று சொல்லி விட்டுப் பார்த்தால், அந்த ஒரு வினாடிக்குள், எப்படித் தான் தூக்கம் வந்ததோ, சோபாவில் சாய்ந்தபடி குறட்டை இழுக்கலானான் என் நண்பன். எனக்கு மீண்டும் கண்ணதாசன் நினைவே வந்தது!!! *

---

# குமரி மாவட்ட திராவிட மாணவர் முன்னேற்றக் கழக முதல் மாநாடு

இடம்: தங்கம் தியேட்டர், நாகர்கோவில்
காலம்: 23—6—61 வெள்ளி காலை 8—மணி முதல் இரவு 10 வரை
தலைவர்: ஆலடி அருணா பி. ஏ. (பி. எல்)
திறப்பாளர்: நி. அன்புச்செழியன் எம். ஏ
கொடியேற்றுபவர்: எஸ். டி. சோமசுந்தரம் பி. இ. (திராவிட மாணவர் முன்னேற்றக் கழக பொதுச்செயலாளர்)

## சொற்பொழிவாற்றுவோர்

| | | | |
|---|---|---|---|
| கே. ஏ. கிருட்டிணசாமி | எம்.ஏ. பி.எல் | ஆர். தியாகசாமி | ,, |
| | | கிருட்டிணன் | ,, |
| உ. பில்லப்பன் | ,, | அப்பர் சுந்தரம் | எம். ஏ. பி.டி |
| கிருட்டிணமூர்த்தி | ,, | | பி. எல் |
| எம். எஸ். வெங்கடாசலம் | ,, | சி.என்.ஏ. பரிமளம் | எம்.பி.பி.எஸ் |
| | | இனியன் | ,, |
| முரசொலி மாறன் | எம். ஏ | மோகன்தாஸ் | ,, |
| உ. கணபதி | ,, | சிவகுமாரன் | பி. இ |
| து. நவமணி | ,, | ஆ. சுப்பிரமணியம் | ,, |
| கு. இளஞ்சேரன் | ,, | இரா. பிச்சை | பி. ஏ. பி.எல் |
| த. கந்தசாமி | ,, | பி. எஸ். மணியன் | ,, |
| த. கிருட்டிணன் | ,, | செல்லையா | ,, |
| இரா. சேது | ,, | மார்க்கண்டன் | ,, |
| பெ. சீனிவாசன் | ,, | ப. அழகியநம்பி | ,, |
| என். வி. என். சோமு | பி. ஏ. | மதனகோபால் | பி. காம் |
| எம். ஏ. மசூத் | ,, | ஆ. பாலசுப்பிரமணியம் | ,, |
| டி. கே. பொன்னுவேலு | ,, | பி. மணிவேந்தன். | |
| அ. தேவராசன் | ,, | இலக்குமணப்பெருமாள் | பி. ஏ. |
| பி. யூ. செழியன் | ,, | | பி. டி |
| க. இராசாராம் | ,, | இரா. இளந்திரையன் | பி. ஓ. எல் |
| தோழியர் ஏழிசைவல்லி | ,, | ஏ. எல். சுப்பிரமணியன் | பி.எஸ்சி |
| ச. அமுதன் | ,, | | பி. எல் |
| களந்தை சின்னா | ,, | மலைச்சாமி | பி. ஏ. ஹானர்ஸ் |
| அலிசேக்மன்சூர் | ,, | கே. எஸ். சம்பத் | பி. இ. ,, |
| கி. பழனிமுத்து | ,, | புதுமதியன் | பி. எஸ்சி |
| ஏ. திரவியம் | ,, | தோழியர் எஸ். பி. சற்குணம் | |

ஆகியோர் பல்வேறு தலைப்புகளில் சொற்பெருக்காற்றுவர். மாலை 6—மணி முதல் 9—மணிவரை இசைமுரசு நாகூர் இ. எம், அனிபா குழுவினரின் இன்னிசை விருந்து நடைபெறும்.

காலை 7—மணிக்கு கோட்டாறு, ஈந்தாம்மொழி சந்திப்பிலிருந்து யானை, குதிரை முன்செல்ல, தாரை தப்பட்டை முழங்க மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு 8—மணியளவில் மாநாடு நடைபெறும் இடத்தை அடையும்.

செயலாளர்கள்:
ஆர். நீலகண்டன் பி. ஏ. எல்எல்பி
சி. கிருட்டிணன் பி.ஏ.பி.எல்
சந்திரன் பி.எஸ்சி
ஜே. கொர்பட்சான்

வரவேற்புக் குழுத் தலைவர்: எம். சி. பாண்டியன் பி.ஏ. பி.எல்
பொருளாளர்: எஸ். ஆனந்தன் பி. ஏ.
தொண்டர்படைத் தலைவர்: சிதம்பரம், எஸ். எப்.டி. தாசீம்

---

# காஞ்சியில்

## செங்கற்பட்டு மாவட்ட தி. மு. செயற்குழுகூட்டம்

15—6—61 வியாழக்கிழமை காலை 10 மணி அளவில் காஞ்சீபுரம் 'திராவிட நாடு" நிலயத்தில், தி. மு. க. பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா அவர்கள் முன்னிலையில் செங்கற்பட்டு மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்:—

அவ்வமயம், கழகத்தின் எதிர்கால வேலை திட்டங்கள் குறித்தும், மற்றும் நமது மாவட்ட "தேர்தல் நிதி" அளிப்பு சம்பந்தமாகவும், 17, 18—6—61-ல் காஞ்சியில் கொள்கை பரப்புவோர் கூட்டம் நடைபெறுவதல், அதுகுறித்து நாம் நமது மாவட்டக் கழகம் மேற்கொள்ளவேண்டிய பொறுப்பு குறித்தும், பேசி முடிவு செய்யவேண்டி இருப்பதால் எல்லா செயற்குழு உறுப்பினர்களும் இதனையே அழைப்பாகக்கருதி தவறாமல் வருகைதர வேண்டுகிறேன்.

அன்பன்,
சி. வி. எம். அண்ணாமலை
செயலாளர் தி- மு. க.—செங்கற்பட்டு மாவட்டம்

---

15—6—61-ல்
"முக்கனி"
திங்கள் இதழ்
எட்டணா முன் பணத்துடன்
ஏஜண்டுகள் எழுதுக
8, வேலர்ஸ் ரோடு,
சென்னை-2.

# கேள்வி பதில்

கே: "12 ஆண்டுகள் இயக்கம் நடத்திய பிறகு நான் வெளியே போய் விடுவதென்ருல். ஏதோ பாதி ராத்திரியில் அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு ஓடுகிறேன் என்றுதானே பொருள்'," என்று ஈ. வெ. கி. சம்பத் 16—2—61ல் திருச்சிப் பொதுக் கூட்டத்தில் பேசியதற்கும் (இன முழக்கம் 24—2—61) அவர் வசமுள்ள கழகத்தின் இந்தி எதிர்ப்பு நிதியினைத்தராமலிருப்பதற்கும் ஏதாவது தொடர்பு இருக்குமா அண்ணு?

இரா. இராசன்
சுப்பிரமணியபுரம்.

ப: பேச்சு, இருதயத்தின் எதிரொலி என்கிருர்கள் உளநூல் வல்லுநர்!

*

கே: தி. மு. கழகத்திலே தியாகிகள் இருக்கிருர்களா? சிறை சென்றவர்கள்- இருக்கிருர்களா? என்று கவிஞர் கண்ணதாசன் கேட்கிருரே!

சி. டி. கோவிந்தசாமி
சின்னகம்மியம்பட்டு.

ப: கல்லக்குடி அறப்போரின் காரணமாக, தான் சிறைக்குப் போனதைக்கூட அவர் மறந்தது, வேண்டுமென்றல்ல! அது அவர் சுபாவம்!!

* * *

கே: பெரியார் ராமசாமி காங்கிரசை விட்டு விலகியபோழ்து காங்கிரஸ் பணத்தைச் சுருட்டி வந்ததாக ஒரு உண்மைக் காங்கிரஸ் ஊழியர் கூறுகிருர். உண்மையா?

இரா. கிருட்டிண மூர்த்தி
சிக்கல்.

ப: கதர் நிதியிலிருந்து ரூபாய் முப்பதினுயிரத்தைக் கொண்டு போய்விட்டார் என்ருெரு குற்றச்சாட்டு அய்யாமீது இருந்ததாக பழைய சுயமரியாதைக் காரர்கள் சொல்வார்கள்!

*

கே: திராவிடராட்டாவது வெங்காய நாடாவது என்று பேசி வரும் திராவிட இயக்கத்தினர் தங்கள் இயக்கத்திற்கு திராவிட கழகம் என்று பெயர் வைத்திருப்பது ஏன்?

எஸ். இராமநாதன்
சி.ழஇராசா வீதி. புதுக்கோட்டை.

ப; செயற்'கரிய' செய்பவர் பெரியார்!

* * *

கே: தமிழ். மராட்டியம். வங்காளம் என்று பல தேசீயக்கட்சியை உருவாக்கும் புதுக்கட்சியினர் அதற்குத் தலைமை நிலையமான அகில இந்தியத் தேசீயக் கட்சிக்கு தலைவராக புதிய 'எத்தர்' வருவாரரா? அல்லது யார் வருவார்?

எம். பேரின்பதாஸ்
நாகர்கோவில்.

ப: தலைமையாவது! அகிலமாவது! இங்கு துவக்கப்பட்ட கட்சியே ததிங்கிணதோம் போட வேண்டிய நிலை வந்துவிட்டது வெகு தூரத்திலிருக்கும் உங்களுக்குத் தெரிய நியாயமில்லை. "அப்பாப்பா! எத்தனை காபி, எத்தனை பேருக்குச் சாப்பாடு—பார்க்க வருசின்றவர்கள் பார்த்ததும் போகக்கூடாதா?, பெரிய தொல்லையாப்போச்சே!" என்று ஒருவர் உறுமவும், "என்னுப்பா! எடுத்ததுக்கெல்லாம் இப்படி விழுகிருரே...ஊம்..." என்று வட்டமிடும் சிலர் குமுறுவதும் ஆரம்பமாகி விட்டது நண்பரே! இதுவா, வாழப்போகிறது—அகில இந்தியத்தை எட்டி பிடிக்கப் போகிறது!!

* * *

கே: "பெரிய கட்சியாக உள்ள காங்கிரசுக் கட்சியிலிருந்து பெருந்தலைவர்கள் விலகி வந்துள்ள போதிலும் காங்கிரசுக் கட்சி அழியவில்லை என்ருல் ஏராளமான கிளைக் கழகங்களையும் நான்கு லட்சம் உறுப்பினர்களையும் கொண்ட ஒரு எதிர்க் கட்சியை—(தி,மு.கவை) அழிப்பது அவ்வளவு சுலபமல்ல. ஒரு சம்பத்தைப்போல பல்லாயிரம் சம்பத்துக்கள் ஒரு கட்சியை விட்டு மற்ருெரு கட்சிக்கு பிரிந்து செல்வதினுல் கட்சி அழியாது. அப்படி நினைப்பதும் தவறு", என்று எங்களூரில் தமிழரசுக் கழகப் பிரமுகர் க. மு. ஷரீப் பேசினுர்.

ஆறுமுகம்,
சோலார்ப்பேட்டை.

ப: நானும் "தமிழ்நாடு" ஏட்டில் படித்தேன்! உண்மையைச் சொல்லும் துணிவைப் பாராட்டுகிறேன்!!

கே: புதுக்கட்சியின் சார்பில் கவிஞர் கண்ணதாசனும், எம். பி. சுபபிரமணியமும் மராட்டியத்தில் நடைபெற்ற ஒரு மாநாட்டுக்குப் போயிருந்தார்களாமே!

வில்லவன்
சென்னை-2

ப: போய்ப் பூண்டு வந்த பூணரம்பற்றி 'தாதாமிராசி'க்கு வேண்டியஒருவரைக் கேட்டேன் இங்கிருந்து பணம் செலவழித்துக்கொண்டு போன கவிஞர் மாநாடு எப்படிநடக்கிறதென்று வேடிக்கை பார்த்தாராம்—பேச விலையாம்!! எதில் பேசுவது? சுப்பிரமணியம் ஆங்கிலத்தில் எழுதி எடுத்துக்கொண்டுபோயிருந்த ஒரு வாழ்த்தினை மூன்று நிமிடங்கள் படித்தாராம்! நமது சோலை மாவட்ட தி. மு. க. மாநாட்டுக்கு வந்தாரல்லவா பாபாசாகிப் எனும் மராட்டிய **எம்,** பி. அவர் நடத்திய மாநாடு **இது** சம்பத்தை 'தி. மு. க. [illegible]ற' குறிப்பிட்டு அவர் அழைப்பு அனுப்பியதாகச் சொல்லுகிருர்கள்! என்னமோ! இதைப்போல் 'அங்கே-இங்கே" என்று சொல்வதிலா பெருமையிருக்கிறது!! இங்கே ஆரம்பித்த கட்சிதான் அதற்குள்ளேயே இளைக்கிறதே.

> புதிய முகவரி;
>
> "அறப்போர்"
>
> 12, 3-வது குறுக்குத் தெரு,
> டிரஸ்ட்புரம்,
> கோடம்பாக்கம்,
> சென்னை-24.

*

கே: ஆமாம்! கடந்த இதழில் "வாழுமா!" என்று தாங்கள் எழுதிய தலையங்கம்...?

சுந்தரலட்சுமி
உறையூர். திருச்சி

ப: ஆழ்ந்த யோசனையுடனும் அனுதினமும் சம்பத்தின் கட்சி அலுவலகத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளை அறிந்தபின்னும் தீட்டியது சகோதரி! ஒவ்வொருவராக, எப்போது நம்மிடம் வருவது என்று அங்கே யோசிக்கிருர்களாம்! உங்களூர் எஸ். வி. லிங்கம் அண்ணனைக் கேளுங்கள்—போய்வந்த புதுக்கட்சியின் யோக்கியதையை நன்ருகச் சொல்வார்.

—o—

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

முடியாது, இத்தொகையை அளித்தது, மக்கள் மன்றமாகும்! அந்த மாமன்றத்துக்கு, கனிவு நிறைந்த கைகூப்புதலைத் தெரிவிப்போம்!!

வசூலாகியிருக்கிற இத்தொகை போதுமா?

நிச்சயமாகப் போதாது!

இதோடு தேர்தல் நிதியை நமது பொருளாளர் நிறுத்தி விடுவாரா?

மாட்டார்!

கடைசி நேரம்வரை முயற்சிக்கிறவர் மூனுகானு!! "ஒன்றரை லட்சத்தில், இன்னும் சில மாவட்டங்களின் கோட்டா, பூர்த்தியாகவில்லை. அதுவும் பூர்த்தியானுல் நிச்சயம் 2 அல்லது இரண்டரை லட்சம் வரும்" என்று பெருமையோடு, சொல்கிருர். "அண்ணு சொன்ன ஐந்து லட்சத்தை வசூலிக்காமலா?", என்று ஆர்வத்தோடு பொறுமுகிருர். அவருடைய முயற்சியும் உங்களுடைய ஒத்துழைப்பும் கிடைத்தால் ஐந்து லட்சமென்ன, பெரிதா!!

இந்த ஒன்றரை லட்சமும் சேர்ந்திருக்கின்ற நேரம் எது வென்று எண்ணும்போதுதான், இனனும் உள்ளம் பூரிக்கிறது. இந்த நேரம் கழகத்தின்மீது தோழர் சம்பத்து மண்ணை அள்ளிப் போடுகின்ற கொடுமையான நேரம்! தீர்ந்தது தி. மு. க.—சிக்கல்! தகராறு! என்று வெந்ததைத் தின்று தெந்தினு பாடும் வீணர்கள் வீம்பு பேசும் நேரம்! பெரியார் இதுதான் சமயமென்று இன்னும் இரண்டு குண்டுகளை வீசும் நேரம்! காமராசர் ஒரு பக்கம் கண்களை வீசிக் கொண்டிருக்கிற நேரம்! அடுத்து வரப்போகிறது தேர்தல், இந்த நல்ல சமயத்தில் கழகத்தின் குரல்வளையைப் பிடித்துக் கொல்ல துணிந்து விட்டாரே பெரியாருடைய பிள்ளை என்று நல்லவர்கள் உருகுகின்ற நேரம்! நாயே-பேயே-என்று புதுக்கட்சிப் புனிதர்கள் நமக்கு "நன்றி" தெரிவிக்கும் நேரம்! ஆடாமல், அசையாமல், சமூகமெனும் கடலிலே, சனுதனம் எனும் சண்டமாருதம் ஒரு பக்கமடிக்க, இன்னெருரு பக்கம் ஏகாதிபத்தியம எனும் வாய் பிளந்து துடிக்க, மிதந்து கொண்டிருந்த சுதந்திரக் கப்பலுக்கு ஓட்டையிட்டுத் தண்ணீரில் கவிழ்க்கத் தகாதவர்கள் முயற்சிக்கும் இந்த நேரத்திலே, லட்சம் ஒன்றரை லட்சமாகியுள்ளதெனின் உண்மையில் அகமகிழ்ச்சி ஏற்படாமலாயிருக்கும்? யார் போனுலென்ன—புழுதி[illegible]ய வாரித் தூற்றினுலென்ன—எமது இலட்சியம் திராவிடநாடு—அதற்குப் பாடுபடுவது திராவிட முன்னேற்ற கழகம்-நிதிதந்து அதன் நிலையை உயர்த்துவதே எம் கடமை! வீணர் தம் வெற்றுரைக்குக்காது கொடுப்பது மடமை! திராவிடம் நமதுஉரிமை! அதைச் சொல்ல, வரவிருக்கும், தேர்தலில் காங்கிரசை முறியடித்துக் காட்டுவதே நமக்குப் பெருமை! என்று உழைத்திடும், நமது குடும்பத்தாரின் கொள்கைப் பிடிப்பின் வலிவையன்றி வேறெதைக் காட்டுகிறது இந்த நிதியளிப்பு-என்ன சொன்னுய்?— குடும்பமா!— அரசியலில் குடும்பமாவது, குட்டிச்சுவராவது-இதெல்லாம் பித்தலாட்டம்—என்பார், புதுக்கட்சித் தலைவர். அவர்களுக்கு மக்கள் ஆட்டக்காயாகத்தான் தெரிவர்! அத்தகைய மனவளமே அவருடையதென்பதை நாம் அறிவோம்! அவருக்கு, தன்னுடையது மட்டுமே, குடும்பமாகத் தெரியும். அத்தகைய தன்னல மறுப்புள்ள வீரர் அவர்! ஆனுல், நமக்கு, நாடே குடும்பம். இதனைப் பெருமிதத்தோடு, சொல்வோம். பூரிப்போடு நினைப்போம். ஒருவர் கண்ணீரை ஒருவர் துடைப்போம். அண்ணு! தம்பி! அக்கா! என்று ஒருவரை ஒருவர் அழைத்து மகிழ்வோம். ஒருவர் மகிழ்ந்தால் இன்னெருவர் மகிழ்வோம். சேர்ந்தே வாழ்வோம், சேர்ந்தே சாவோம்!—நமக்கு, நாமே!! கூடப்போம்-இன்னும் கழக நிதியினைக் குவிப்போம் - அதோ பொருளாளர் நம்மை இருகையேந்திக் கேட்பது தெரிகிறது-வணங்கிடும் அவர் காத்தில், பொன்னல்ல காலணுவாயிருந்தாலும் வைப்போம்! அந்தக் கரம், நம்முடன் குடும்பப் பாசம் கொண்டு தழுவுவதைப் பெரும் பேறெனக் கருதும் கரம், அந்தக் கரத்தை நிரப்புவோம்! வரும் தேர்தலில் காங்கிரசை முறியடிக்கக் கழக நிதியினை மேலும் குவிப்போம் — குவிப்போம்!!

—0—

ஆசிரியரும், வெளியிடுபவரும் : இராம. அரங்கண்ணல், சென்னை 24.
அச்சிட்டோர் எம். பி. சத்தியமூர்த்தி முல்லை அச்சகம் 3-40 மவுண்ட் ரோடு சென்னை-6